
# வாழும் சுவடுகள்

டாக்டர்

என்.எஸ். நடேசன்





# வாழும் சுவடுகள்

## கால்நடை வைத்தியரின் அநுபவங்கள்

## டாக்டர் என்.எஸ். நடேசன்

அவுஸ்திரேலியா

மித்ர வெளியீடு

**Mithra Arts & Creations**

சென்னை ◆ சிட்னி ◆ மட்டக்களப்பு

Mithra Books
ISBN 1 876626 32 1

Apart from any fair dealing for the purpose of Private Study, Research, Criticism or Review, as Permitted under the Copyright Act, No part may by reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or any means, electronic, mechanical or photocopying, recording or otherwise without prior written permission from the publishers.

Mithra Publication books are published by
**Dr Pon Anura**

Publication Editor
**Espo**

**Vazhum Suvadugal**

(A Collection of 25 Humane Episodes)

by

**Dr. Noel.S. Nadesan**

Mithra Books First Edition
**Sep 2002**

Illustrations
**Adimoolam, Sounther, Elangainathan, Sivabalan**

Layout
**M. Sridharan**

Made in India by Mithra Book Makers

**Mithra Arts and Creations**

1/23 MUNRO STREET
EASTWOOD 2122 AUSTRALIA
Ph: (02) 9868 2567
e-mail: www.anura@matra.com.au
Fax: (02) 9868 4662

30 VANNIAH STREET
BATTICALOA (EP)
SRI LANKA

375/8-10 ARCOT ROAD
CHENNAI 600 024 INDIA
Ph: (044) 372 3182
e-mail: www.mithra@md4.com.in
Fax: 0091-44-4721336

மித்ர : 65

முதற் பதிப்பு : செப்டம்பர் 2002
பக்கங்கள் : 112

# என்னுரை

"நமது மூதாதையர்களின் தோள்களில் நாம் ஏறி நிற்கிறோம்." இவ்வாறு குறிப்பிட்டார் பரிணாம வளர்ச்சி குறித்து சிந்தித்த தத்துவமேதை சார்ள்ஸ் டார்வின்.

இன்றைய நவீன உலகில் நாம் அநுபவிக்கும் சகல வாய்ப்பு வசதிகளுக்காகவும் நாம் நமது முன்னோர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டவர்கள். அவர்களை மறக்க முடியாது.

பகுத்தறிவு மிக்கவர்கள், மனிதர்களின் நோய்பிணி தீர்த்து சாவுடன் போராடியவர்களை உயிர்ப்பிப்பதற்கு மாத்திரம் உழைக்க வில்லை. ஐந்தறிவு கொண்ட உயிரினங்களின்பாலும் அவர்கள் நேசம் கொண்டிருந்தார்கள்.

ஆதிக்க வெறி கொண்டு மனித உயிர்களை பலியெடுத்து, இறுதியில் அன்பு மார்க்கமே சிறந்தது என்று ஞானோதயம் பெற்ற அசோக சக்கரவர்த்தியே உலகில் முதல்முதலாக மிருகங்களுக்கென மருத்துவமனையை நிறுவியதாக வரலாறு கூறுகின்றது.

மிருக மருத்துவராக நான் பயிற்சிபெற்ற காலம் முதல் எனக்குக் கிட்டிய அனுபவங்களே இங்கு பதிவாகின்றன.

கலை, இலக்கிய, பத்திரிகைத்துறையுடன் பரிச்சயம் மிக்கவனாக ஊறி வளர்ந்த கட்டத்திலே இவை பதிவாகின்றன என்பதும் உண்மை.

எனது வாசிப்பு அறிவுக்கு வித்திட்டவர் எனது தாய்வழிப் பாட்டன். அவர் கண் பார்வையை இழந்து எதனையும் வாசிக்க முடியாமல் தவித்த காலப் பகுதியில் எனக்கு ஆறு வயது இருக்கும்.

அவருக்காக நான் வீரகேசரியையும் கல்கியையும் உரத்து வாசிக்க வேண்டியவனானேன். என் பாட்டனாருடன் மேலும் பலர் என் வாசிப்புக்குச் செவிமடுத்தனர்.

கல்கியின் 'சிவகாமியின் சபதம்' தொடர் கதையை எனது பாட்டனார் என் வாசிப்பின் மூலமே கேட்டு ரசித்தவர்.

இதற்காக எனக்கு அன்று கிடைத்த தினசரிக் கூலி ஐந்து சதமாகும். ஒரு புறத்தில் இவ்வாறு தினக்கூலி கிடைத்தாலும், இந்த வாசிப்புப் பணியை நான் ஒரு தொல்லையாகவும் கருதியதுண்டு.

இந்த வாசிப்பு வேலை என்னை வீட்டோடு கட்டுப் படுத்தியதுங்கூட ஒருவகையில் பின்னாளில் தொடர்ச்சியாக வாசிக்கும் பழக்கத்தை என்னுள் ஏற்படுத்தியிருக்கலாம் என்றும் இப்போது கருதுகிறேன்.

மிருகவைத்தியராக நான் தொழில் புரியத் தொடங்கியதும் எனக்குக் கிடைத்த அநுபவங்களை நினைவுகளில் அழுத்தமாக பதிவு செய்து வைத்திருந்தமையால்தான் 'உதயம்' வாசகர்களுடன் அவற்றைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது.

வழக்கறிஞரிடமும் வைத்தியரிடமும் உண்மையை மறைக்கக் கூடாது என்பர். அதே போன்று, வழக்கறிஞர்களுக்கும் வைத்தியர்களுக்கும் தமது வாடிக்கையாளர்களின் அந்தரங்கங்களை வெளியிடல் தகாது என்ற பண்பும் இருக்க வேண்டும் என்கிற மரபும் நீடிக்கின்றது.

ஆனால் மிருகவைத்தியர்களை இந்த Client confidentiality கட்டுப்படுத்துவதில்லை. இதனால் என் அனுபவங்கள் இங்கு பதிவாகின்றன.

தனது மிருக வைத்திய அநுபவங்களை இரண்டாவது உலகமகா யுத்தகாலத்தில் புத்தகமாக வெளியிட்டவர் Dr. James Herroitot இவருக்கு மிருக் வைத்தியர்கள் யாவரும் மிகவும் கடமைப்பட்டவர்கள்.

இவரது அநுபவங்கள் பின்பு தொலைக்காட்சித் தொடர்களாக All Great and Small என்ற பெயரில் வெளியானது. இவற்றை பின்னாளில் பார்த்த மாணவர்கள் பலர் மிருக வைத்தியதுறையில் பெரிதும் ஈர்க்கப்பட்டனர். உலகடங்கிலும் 65 சதவீதமான பெண்கள் இத்துறையில் (மருத்துவத்துறையில்) பயிலுகின்றனர்.

நான் மிருக வைத்தியராக மாத்திரம் இயங்காமல், இலங்கையின் இனப்போராட்டத்தின் விளைவாக உருவான அகதிகள் விவகாரம், மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தீவிரமாகவும் செயல்பட்டிருக்கின்றேன்.

தமிழ்நாட்டில் தஞ்சமடைந்த வேளையிலும், அவுஸ்திரேலியாவில் புகலிடம் பெற்ற பின்பும் என் இப்பணி தொடர்கின்றது.

மனிதர்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல்கொடுக்க வேண்டிய அதே சமயம் – நான் சிகிச்சை அளிக்கும் பிராணிகளின் உணர்வுகளையும் மதிக்க வேண்டிய கடமைப்பாடு எனக்குண்டு எனக் கருதுகின்றேன்.

அதனால்தான், நான் சந்தித்த மனிதர்கள் மாத்திரமின்றி பிராணிகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

இந்த அநுபவங்களைத் தொடர்ந்து எழுதுவதற்கு களம் தந்தது Tamil News Pty Ltd அவுஸ்திரேலியா ஸ்தாபனத்தின் வெளியீடான 'உதயம்'.

இத்தொடரை எழுதிய பொழுது எழுத்துப் பிழை– இலக்கணப் பிழைகளைச் செப்பம் செய்து உதவிய அதே சமயம், ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கிய நண்பர்கள் மாவை நித்தியானந்தன், என். கணேசலிங்கம், லெ. முருகபூபதி ஆகியோருக்கும் எனது நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவிக்கின்றேன்.

தொடர்ந்து இதனை உதயத்தில் படித்து வந்த நண்பர் எஸ்பொ அவர்கள், இத்தொடர் உதிரியாகிவிடாமல் நூலாக வேண்டும் எனப் பெரிதும் விரும்பினார். அவரது விருப்பின் நியாயத்தையும் உணர்ந்தேன். அதனால், அத்தொடர் இன்று தொகுப்பாகின்றது. வாசகர்களுக்கும், மித்ர வெளியீட்டு நிறுவனத்திற்கும் எனது அன்பார்ந்த நன்றி.

**2002-09-28** **நொயல் நடேசன்**
**அவுஸ்திரேலியா**

Noel. S. Nadesan
Mulgrave Veterinary Clinic
Wheelers Hill Vic - 3150
Ph : (03) 9561 0541 Fax : 9561 0242
Email : Nadesan.ihug.com.au

# புதிய அனுபவத்திற்கு அழைக்கப்படும் வாசகர்கள்..

இந்த நூலில் இடம்பெறும் அனுபவ பதிவுகள் தமிழுக்குப் புதிய வரவு. தமிழ்படைப்பு இலக்கியத்தில் கட்டுரை, சிறுகதை, நாவல், நடைச்சித்திரம் என பலகூறுகள் இருக்கின்றன.

அந்த வகையில் - நண்பர் நடேசன் 'உதயம்' வாசகர்களுடன் பகிர்ந்து கொண்ட இந்த அநுபவ சித்திரங்கள் - வாசகர்களை புதியதொரு உலகத்திற்கு அழைத்துச் செல்கின்றன.

பெரும்பாலான இலக்கிய படைப்பாளிகளுக்கு வாழ்வின் தரிசனங்களே கதைகளுக்கான கருப்பொருளாகவும் அமைந்து விடுகின்றன.

நடேசனுக்கும் இது நிகழ்ந்துள்ளது.

அவரது மிருக மருத்துவதுறையில் அவர் தமக்கு கிடைத்த அனுபவங்களை - எமக்குச் சொல்கிறார்.

இந்த உலகின் ஜீவராசிகளில் மனிதப்பிறவியே மிகவும் உயர்ந்தது, உந்நதமானது என்ற கருத்தே மேலோங்கியுள்ளது. அதற்குக் காரணம் மனிதப்பிறவியின் சாதனைகளும், வெற்றிகளும், கண்டு பிடிப்புகளுமாம்.

ஆனால், மனிதர்களைப் போன்று சிந்திக்கவும் - வாய்பேசவும் முடியாத உயிரினங்களிடமுள்ள மேன்மையான குணங்கள் வெளி உலகிற்குத் தெரியவருவதில்லை.

தெரிந்தாலும் அவற்றை எழுத்தில் பதிவு செய்வது என்பது அபூர்வம்.

அந்த வகையில் நடேசன் வித்தியாசமான பணியில் இறங்கியிருக்கிறார்.

அவர் மிருகவைத்தியராக பயின்று பட்டம் பெற்றது இலங்கையில் பேராதனை பல்கலைக்கழகத்தில்.

இலங்கையில் சில பாகங்களிலும், தமிழ்நாட்டில் செங்கல்பட்டு மாவட்டத்திலும், மிருகமருத்துவராக பணியாற்றிய நடேசன் - அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்த பின்பும் தமது பணியைத் தொடர்கின்றார்.

சிறுவயதிலிருந்தே வாசிப்பு பயிற்சியை மேற்கொண்டிருந் தமையால் இந்த நாட்டில் தரமான பத்திரிகை ஒன்றை வெளியிட வேண்டும் என்ற கனவுடனும் வாழ்ந்தார்.

அக்கனவை நனவாக்குவதற்காக கடுமையாக உழைத்தார். அதன்பலன் 'உதயம்' மாத இதழ் இந்த நாட்டில் சீராக, கிரமமாக ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து வெளியாகிறது.

நடேசன் தமது அநுபவங்களை பதிவு செய்வதற்கு சிறந்த களமாக உதயத்தையே தேர்ந்தெடுத்தமையால் தமிழ் வாசகர் களுக்கு இந்த அநுபவங்கள் புதிய வரவாகியுள்ளன.

அவுஸ்திரேலியாவில் மனிதர்களுக்குரிய வாழ்வுப் பாதுகாப்புக்கு 'மனித உரிமை பேணும் சட்டங்கள் இருப்பது போன்று' உயிரினங்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் வழங்கப் பட்டிருக்கிறது.

நாய், பூனை உட்பட மற்றும் வீட்டில் வாழும் வளர்ப்புப் பிராணிகளுக்கென விசேட உணவுகளும், மருத்துவ வசதிகளும் கூட உள்ளன. ஒரு வீட்டின் பிராணி இறந்தால் அல்லது காணாமல் போனால் அதனை ஒரு துக்கநிகழ்வாகவே இந்நாட்டு மக்கள் கருதும் அளவுக்கு இவை மக்களின் வாழ்வில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

கேள்வி ஞானத்தில் நாம் அறிந்தவற்றுக்கு வலுச்சேர்க்கும் வகையில் நடேசனின் எழுத்துக்கள் பதிவாகியுள்ளன.

நடேசன் தன்னை ஒரு படைப்பு இலக்கியவாதியாக என்றைக்கும் பிரகடனப்படுத்திக் கொள்ளாதவர். மனித உரிமைகளுக்காக தொடர்ந்து குரல் எழுப்பியிருப்பவர். அது சம்பந்தமான சமூகப் பணிகளில் ஈடுபட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியிருப்பவர். இலங்கை அகதிகள் பெற்றோரை இழந்த அனாதைப்பிள்ளைகள் தொடர்பாக விசேட கரிசனையுடன் ஒரு இயங்கியல்வாதியாகத் தொழில்படுபவர்.

அதற்கு 'உதயம்' பக்க துணையாக இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

ஒருவரின் மனித உரிமை பேணும் மனிதாபிமானவாதியின் மற்றுமொரு எல்லையில் இருப்பதுதான் ஜீவராசிகள் குறித்த அவரது சிந்தனைகளும் செயல்பாடுகளும்.

தமது வீடு போன்ற சொத்துக்களைக்கூட தமது வளர்ப்புப் பிராணிகளுக்கு இறுதிக்காலத்தில் எழுதிவைத்த விநோதமானவர்களையும் அறிகின்றோம்.

அதேசமயம் அந்த ஜீவராசிகளின் நுண்மையான உணர்வுகளையும் கேள்விப்படுகின்றோம்.

ஆறறிவு படைத்த மனிதனின் ஈனச்செயல்களைக்கூட தனது மோப்ப சக்தியால் கண்டுபிடித்து குற்றவாளியைக் கைதுசெய்ய உதவும் அபூர்வமான குணம் நாய்க்கு இருக்கிறது.

இந்த படைப்பு இரகசியம் எம்மைப் பிரமிக்க வைக்கிறது. வாய்பேச முடியாத ஜீவராசிகளிடம் குடிகொண்டுள்ள மற்றும் பல விநோத குணங்களையும் - அவற்றின் எஜமானர்களாக விளங்கிய மனிதர்களின் அநுபவங்களையும் தமிழ் வாசகர்களுக்கு சொல்லியிருக்கிறார் நடேசன்.

அவருக்கு எமது வாழ்த்துக்கள்.

**விக்ரோரியா** — லெ. முருகபூபதி
**அவுஸ்திரேலியா**
**23. 3. 2002**

# முன்னீடு

இதனை எழுத என் பேனாவை ஊன்றும் பொழுது எனக்கு, வன்னியசிங்கத்தாரின் ஞாபகம் வருகிறது. அவர் என் மனைவியின் அப்பு. மட்டக்களப்பில் திறமான மாட்டு வைத்தியரெனப் பெயரெடுத்தவர். மாடுகளின் பிரசவத்திற்கு அவரை வெல்லக்கூடிய ஒரு 'மருத்துவச்சி' மட்டக்களப்பு மாநிலத்தில் வாழ்ந்ததில்லை என அவர் ஜீவந்தராக இருந்த காலத்திலேயே பாராட்டப்பட்டவர். மாடுகள் சம்பந்தமான வாகடங்களை நுணுகி ஆராய்ந்தவர். அரசாங்க மிருகவைத்தியர்கள்கூட அவருடைய ஞானத்திலே தெளிவைப் பெற்றனர்.

மிருகங்களுக்கு வைத்தியம் செய்பவர்களுக்கும் மனித நேயத்திற்கும் மகத்தான ஓர் உறவு உண்டு என்பதை வன்னியசிங்கத்தார் எண்பித்து வாழ்ந்தார். பல்லாண்டுகள் கழித்து, அதே மனித நேயத்தினை நடேசனுடைய இந்த இலக்கியத்தில் அநுபவித்துத் திளைக்கின்றேன்.

மனித டாக்டர்கள் பலர் அவுஸ்திரேலியாவிலே கூட மனித நேயங்களை இழந்தும் தொலைத்தும் பணம் பண்ணுவதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு வாழ்வதைக் கண்டு, அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளேன். ஈழத்துத் தமிழ்ப்பெண் ஒருவர்; அவுஸ்திரேலிய பல்கலைக் கழகத்தில் மருத்துவம் கற்றவர்; மகப்பேறு வைத்தியத்தில் சிறப்பு பயிற்சி பெற்றவர். விரைவுப் பணம் குவிப்பதற்காக சுகப்பிரசவம் சாத்தியம் என்றாலுங்கூட, கருப்பையைக் கிறிப் பிளக்கும் Caesarean operation ஐயே ஊக்குவிக்கிறார். பணம் பண்ணும் ஆசை மனிதத் தன்மையை விதையடித்து விடுமா? உண்மையில், அந்தச் சோகத்தின் படுதாவில் இந்த நூலை வாசிக்கும் பொழுது, மிருக வைத்தியரான நடேசன், வாழ்க்கையில் எந்தெந்த இடங்களில் எல்லாம் மனித நேயம் ஒளிருகின்றது என்பதை மகா இயல்பாகக் காட்டும்பொழுது பிரமிப்பு ஏற்படுகின்றது. அவர் தமது அநுபவங்களிலே தொட்டுக் காட்டும் மனிதநேயம், மனித வாழ்க்கையிலே நம்பிக்கை ஊன்றும் மானுடப் பணியாகவும் மலர்ச்சி பெறுகின்றது.

1989 ஆம் ஆண்டில் முதன் முதலாக நடேசனைச் சிட்னியில் சந்தித்ததாக நினைவு. என் மகன் டாக்டர் அநுரவின் நண்பன் என்ற முறையில் அறிமுகமானார். அறிமுகமான அன்று, அவர், மெல்பென் நகருக்கு புலம் பெயர்ந்து செல்கின்றார் எனவும் அறிந்தேன். பின்னர், அங்கிருந்து, தமிழருடைய சமூக வாழ்க்கையிலும் அக்கறையுள்ளவராக வாழ்வதை அறிந்து மகிழ்ந்தேன்.

அவுஸ்ரேலியாவில் மிக நீண்ட காலமாகத் தொடர்ந்து வெளிவரும் தமிழர் சஞ்சிகை 'உதயம்' என்பது உண்மை. அதன் பிரசுரத்திற்கான ஊக்க

சக்திகளுள் முக்கியமானவராக நடேசன் செயற்படுவதை நான் அறிவேன். 'உதயம்' முன் வைத்த அரசியல் பார்வையை நான் ஏற்கவில்லை. நிராகரித்தவன் என்று கூடச் சொல்லலாம். இருந்த போதிலும், அறிவு நாகரிகத்தை பேணும் வகையில், பத்திரிகை தர்மங்கள் பலவற்றை மதித்து 'உதயம்' வெளிவருகின்றது. உதயத்தின் தமிழ்ச் சேவை என்கிற முகம் எனக்கு உவகை தருவது.

இந்நூலில் இடம்பெறும் கட்டுரை பலவற்றை நான் முதல் தடவையாக 'உதயம்' பத்திரிகையில் வாசித்து மகிழ்ந்தேன். தமிழ் இலக்கியத்தை பொறுத்த வரையில் இது நிச்சயமாகப் புதிய அநுபவமாகும். இந்த நூல், இரண்டு வேறுபட்டவர்களினால் ஏக காலத்திலே எழுதப்பட்டது போன்ற கோலங் காட்டுகின்றது. உண்மைதான். டாக்டர் என். எஸ். நடேசன் என்கிற மிருக வைத்தியர் தனது வைத்திய அநுபவங்களை எழுதுகின்றார். அதே சமயம், நடேசன் என்கிற மனிதநேயனும் புகுந்து கொள்ளுகின்றார். இந்த இரண்டின் சேர்க்கை புது அநுபவமாக மாறுகின்றது. இதனாலும் இந்நூல், தமிழ் இலக்கியப் பரப்பில் ஒரு புதிய சுருதியை சேர்க்கின்றது என்று துணிந்து சொல்லலாம்.

புலம் பெயர்ந்தோர் இலக்கியம் பற்றிய சர்வதேசிய கவனிப்பினை ஈர்ப்பதற்கான முதலாவது குரல் எழுப்பியவன் நான். பெருமைக்காக அல்ல; ஒரு பதிவுக்காகச் சொல்கிறேன். தமிழ் இலக்கியத்திலே புலம்பெயர்ந்தோருடைய அநுபவங்கள் புதிய இலக்கியம் படைப்பதற்கான ஊக்கத்தையும், உந்துதல்களையும், இலக்கிய வடிவங்களையும் அருளுமென நம்பினேன்.

'நாலுக்கால் சுவடுகள்' தமிழுக்கு புதிய சங்கதியைக் கொண்டு வந்து சேர்க்கின்றது. இதில் இடம்பெறும் 'நடுக்காட்டில் பிரேத பரிசோதனை',

'அகதி அந்தஸ்துக் கேட்ட பெருநண்டு' ஆகிய இரண்டும் குமுதம் 'யாழ் மணத்தில்' பிரசித்தமாகி, சர்வதேசத் தமிழ்ச் சுவைஞரின் கவனத்தை ஈர்ந்துள்ளது. இந்நூல் பெரிதும் வரவேற்கப்படும் என்பதன் நன்னிமித்தமாக இதனை அர்த்தப்படுத்துகிறேன்.

புதிய இலக்கிய வடிவங்களில் ஒன்று creative essays. வியாசம் போன்றும் தோன்றும்; அதே சமயம் படைப்பிலக்கியத்திற்குரிய உணர்வுகளும் இலட்சணங் களும் புகுந்து கொள்ளும். இந்த நூல் இப்புது வடிவமே புனைந்துள்ளது.

நடேசனின் இந்தப் புதிய இலக்கிய முயற்சி நூலுருவில் வெளிவருதல் வேண்டும் என்று நான் பல சந்தர்ப்பங்களிலும் அவரை வற்புறுத்தினேன். என் வற்புறுத்தல்களையும் ஆக்கினைகளையும் தாங்காது இதனை மித்ர வெளியீடாக வெளியிட அனுமதி தந்தாரோ; நானறியேன்.

இருப்பினும் புலம்பெயர்ந்தோர் படைக்கக்கூடிய புதிய இலக்கியங்களின் தொனிப் பொருளை உலகளாவிய தமிழர்களுக்குச் சொல்லும் முதனூல்களுள் ஒன்றாக அமையும் 'நாலுகால் சுவடுகள்' என்ற நூலுக்கு மன மகிழ்ச்சியுடன், இந்த முன்னீடை வழங்கி, நடேசனின் இலக்கிய முயற்சிகளை ஆசீர்வதிக்கின்றேன்.

1/23 Munro Street
Eastwood 2122
Australia
✆ : 9858 2567

எஸ். பொ.

எனது பாட்டனார்

எழுவைதீவு

நமசிவாயம் வாத்தியாருக்கு

இந்நூல்

<u>**சமர்ப்பணம்**</u>

உள்ளுறை

நடுக்காட்டில் பிரதேப் பரிசோதனை 15 ★ கலப்பு உறவுகள் 19
ராமசாமி கோனாரின் கவலைக்கு மருந்து 24
என்னை விட்டு ஓடிப் போக முடியுமா? 27 ★ இரத்த தான மகிமை 31
இது ஒரு வகை வசியம் 35 ★ அலர்ஜி : புதிய விளக்கம் 39
அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்... 43 ★ இதயம் பேசுகிறது 46
கமால் - குதிரை - இளம்கொடி 52 ★ கண்ணீர் அஞ்சலி கதை சொல்லும் 57
திரும்பிய காசோலை 60 ★ போதை தந்த கொக்கீஸ் 63
Lawn Mower ஆக்கப்பட்ட செம்மறியாடு 66 ★ மாத்திரையில் மாற்றம் 70
இந்த மண்ணும் அந்த மண்ணும் 73
அகதி அந்தஸ்து கேட்ட பெரு நண்டு 77 ★ நாய் வயிற்றில் பலூன்! 82
பிரசவ வேளையில் அந்த நாள் ஞாபகம் 85
இது ஒரு ராணியின் கதை 88 ★ இப்படியும் ஒரு தியாகம் 94
4¼ உள் கலவி 98 ★ வாழ நினைத்தால் வாழலாம் 102
மஞ்சள் விளக்கின் அர்த்தம்! 107
விதையின் விலை பத்தாயிரம் டொலர் 110

# 1

## நடுக்காட்டில் பிரேதப் பரிசோதனை



'யானை வாழ்ந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்' எனச் சொல்வார்கள். டெஹிவளை மிருகக்காட்சி சாலையிலும், கண்டி எஸல பெரஹராவிலும் தான் யானை களைப் பார்த்திருக்கிறேன். மிருக மருத்துவம் பயிலும் பொழுது, என்றாவது ஒருநாள், ஒரு யானையைப் பிரேதப் பரிசோதனை செய்வேன் எனக் கனவிலும் நினைத்ததில்லை.

பயிற்சி முடிந்து மிருகமருத்துவர் பட்டத்துடன் தொழில் தொடங்கி இரண்டாவது நாளே ஒரு யானை யின் மரணம் தொடர்பாகப் பிரேதப் பரிசோதனைக்குச் சென்றமை என்

மிருக மருத்துவத்துறை வாழ்வில் வித்தியாசமான அனுபவம்தான். சுமார் பதினேழு ஆண்டுகளுக்கு முன்பு மதவாச்சியில், நான் வேலை ஆரம்பித்த அலுவலகத்தில், அந்திசாயும் வேளை. கடமை முடிந்து வீடு திரும்பும் நேரம். அலுவலக வாசலில் ஒரு பொலிஸ் ஜீப் வந்து நின்றது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர், மற்றும் மூன்று கான்ஸ்டபிள்களுடன் வந்திறங்குகிறார்.

"டொக்டர், நான் பதிவியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி. பதிவியா காட்டில் சுட்டுக் கொல்லப் பட்ட ஒரு யானையை பிரேதப் பரிசோதனை செய்ய வேண்டும். அந்த யானையை கொன்று தந்தங்களை எடுத்த இரண்டு பேரைக் கைது செய்துள்ளோம். நீங்கள் வந்து யானையை பிரேதப் பரிசோதனை செய்து அறிக்கை தந்தப் பின்பு தான் அந்த இரண்டு பேருக்கும் எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியும். அதனால் இப்பொழுதே நீங்கள் எம்முடன் அந்த காட்டிற்கு வரவேண்டும்."

இன்ஸ்பெக்டர் வேகமாகச் சொல்லிமுடித்து விட்டார்.

இதென்னடா கஷ்டகாலம். வேலைக்குச் சேர்ந்து இரண்டாவது நாளே இப்படியும் ஒரு சோதனை வரவேண்டுமா? என் மனதின் தயக்கத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல், "சரி... இன்ஸ்பெக்டர்... யானை எப்போது கொல்லப்பட்டது?" எனக் கேட்டேன்.

"சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு" — இந்தப் பதிலைக் கேட்டு நான் அதிர்ச்சியில் மூர்ச்சித்து விழாமல் இருந்ததுதான் அதிசயம்.

ஒரு மாதத்திற்கு முன்பு இறந்த யானை தற்பொழுது என்ன கோலத்தில் இருக்கும்? இவ்வளவு நாள்கள் கடத்திவிட்டு இப்போது வந்திருக்கிறார்களே... என்னை எரிச்சல் வாட்டியது...

பொலிஸ் ஜீப், என்னையும் ஏற்றிக் கொண்டு பதவியா காட்டை நோக்கிப் புறப்பட்டது.

மதாவாச்சிக்கும். பதவியாவுக்கும் இடைப்பட்ட பிரதேசம் பசுமையாகக் காட்சியளித்தது. மரங்கள் அடர்ந்த அந்தக் காட்டுப் பாதையில் பயணம் மேற்கொண்டது முற்றிலும் வித்தியாசமான அநுபவம்தான்.

ஒரு பெட்டிக்கடை அருகே தேநீருக்காக ஜீப் நிறுத்தப் பட்ட பொழுது, அந்தக் கடைக்காரன் உபசரித்த பாங்கில் கிராமிய அப்பாவித்தனம் தென்பட்டது.

பத்து ரூபாயை அவனிடம் நான் நீட்டிய பொழுது அதனை வாங்கிக் கொள்ளாமல் இன்ஸ்பெக்டருக்கு இலவசமாகவே ஒரு பிரிஸ்டல் பக்கட்டை நீட்டினான்.

மீண்டும் புறப்படும் பொழுது, அந்தக் கடைக்காரன் தனது நண்பர் என்றார் இன்ஸ்பெக்டர்.

பொலிஸாருக்கு நண்பர்களாக இருப்பவர்கள் பாவப் பட்டவர்கள் — எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

இன்ஸ்பெக்டர் குறிப்பிட்ட பதவியா காட்டை அடைந்ததும் அவர் சொன்ன பிரகாரம் இறங்கினோம். ஜீப் அதற்கப்பால் செல்லாது. இனி நடந்துதான் காட்டுக்குள் போகவேண்டும். பதினைந்து நிமிடம் நடை.

ஒரு குளம் தென்பட்டது. குளத்தின் வலது பக்கத்தைக் காட்டி, "இதுதான் யானை" என்றார் இன்ஸ்பெக்டர். என்னை மேலும் அதிர்ச்சியடைய வைத்தது நான் கண்ட காட்சி. அங்கு இறந்த யானை இல்லை. பெரிய எலும்புக் குவியல். அதனைச் சுற்றி யானையின் ஊனம் வடிந்த சதைப்படலங்கள் பாசிபடர்ந்தமை போன்று தரை முழுவதும். யானை இக்கோலத்தில் இருந்தால் எங்கே பிரேத பரிசோதனை செய்வது? அருகே சென்று பார்த்தேன். மண்டை ஓட்டைத் தவிர இதர எலும்புகள் இருந்தன.

இன்ஸ்பெக்டரிடம், "யானையின் தலை எங்கே?" என்று கேட்டேன்.

வா-1

குளத்திலே தேடிப் பார்க்குமாறு அங்கு வேடிக்கை பார்க்க வந்த கிராமவாசிகளிடம் சொன்னார் இன்ஸ்பெக்டர்.

இருவர் குளத்தில் இறங்கி சொற்ப வேளையில் யானையின் தலையுடன் வந்தனர். பரிசோதித்தேன். இரண்டு தந்தங்களும் சீவப்பட்டிருந்தன.

எனக்கு ஒரு யோசனை உதித்தது. தலையை கோடாரியால் பிளக்குமாறு சொன்னேன்.

அந்தத் திருடர்களைச் சட்டத்தின் முன்னே நிறுத்துவதற்குத் தேவையான ஆதாரம் யானையின் தலை பிளக்கப்பட்ட பொழுது இன்ஸ்பெக்டருக்குக் கிடைத்தது.

அது என்ன?


அரை அங்குல விட்டமுள்ள ஈயக்குண்டு.

இன்ஸ்பெக்டர் முகத்தில் பிரகாசம்.

"மிக்க நன்றி டொக்டர். இதுதான் தேவை. இனி மரணச் சான்றிதழைத் தாருங்கள். நாளைக்கே வழக்குத் தொடரலாம்" என்றார் இன்ஸ்பெக்டர்.

பராக்கிரமசாலியான யானையை அன்று அந்தக் கோலத்தில் கண்டது, பதவியா பசுமை போன்று மனதில் பசுமையாகப் பதிந்துவிட்டது.

❒



# 2

# கலப்பு உறவுகள்

மனித உழைப்பினால் பசுமை போர்த்தி, இயற்கை வளம் கொழித்து, தேசிய பொருளாதார உற்பத்தி வளர்ச்சிக்கு உரமிட்ட மலையகத்தில், ராகலையில், சூரியகாந்தி தோட்டத்தில் 83ஆம் ஆண்டின் பின்பு சிறிது காலம் பணிபுரிய நேரிட்டது.

கண்ணுக் கெட்டிய தூரம் வரையில், பச்சைக் கம்பளம் போர்த்தியது போன்ற காட்சி. இயற்கை அன்னை தனது பனிப் போர்வையால் அந்தத் தேயிலைச் செடிகளைப் போர்த்தியிருந்தாலும், காலையில் ஆதவன், தனது கதிர்க் கரங்களினால் அந்தப் போர்வையை விலக்கும் காட்சியைச் சித்திரிக்க வார்த்தைகள் தேடவேண்டும்.

எனது மிருக வைத்தியசாலை அந்தத் தோட்டம் அமைந்த மலை உச்சியில் இருப்பதனால், அதனைச் சுற்றி வளர்ந்துள்ள செடிகளை மட்டுமல்ல, அங்கு கொழுந்து பறிக்கும் பெண்களையும், கவ்வாத்து வெட்டும் தொழிலாளர் களையும் பார்க்க முடியும்.

இக்கால கட்டத்தில் அங்கு சில தோட்டத் துரைமார்கள் எனக்கு அறிமுகமானார்கள். இலங்கை சுதந்திரமடைந்த பின்பு வெள்ளைத் துரைமாரினால் ஏற்பட்ட இடைவெளியைக் கறுப்புத் துரைமார் நிரப்பினார்கள்.

நிறத்தில்தான் வேறுபாடு. நடை, உடை, பாவனை, பழக்க வழக்கங்களில் மாற்றமில்லை. இவர்களில் வித்தியாச மானவர் கோல்டன் தோட்டத்தைச் சேர்ந்த கந்தசாமி. விரல்விட்டு எண்ணக்கூடிய தமிழர்களே அப்போது தோட்டத் துரைமார்களாக இருந்தார்கள்.

கந்தசாமியின் கோல்டன் தோட்டத்தில் அவரது அல்ஷேசன் நாய், அங்கு வளரும் ஆடு, மாடுகளை பரிசோதிக்கச் செல்லும்போது அவரது அன்பான விருந் தோம்பலிலும் பங்கு கொள்ளவேண்டும். சில சமயங்களில் அவரது பெரிய பங்களாவில் தங்கியிருந்து, திரும்ப நேரிடுவது உண்டு.

அங்கு தங்குவதில் ஒரே ஒரு சிரமம் பல அறைகளையும் பல கதவுகளையும் கொண்ட அந்தப் பெரிய பங்களாவில் எந்தக் கதவு toilet அறைக்குரியது என்பதைத் தேடுவதுதான். இது விடயத்தில் நான் மிகுந்த எச்சரிக்கை உணர்வோடுதான் இருப்பேன். காரணம் toilet கதவைத் திறப்பதற்குப் பதிலாக அவரது Bed Room கதவைத் திறந்துவிடக் கூடாது அல்லவா? அதனால் இரவில் தங்கு முன்பு அந்த பங்களாவின் அமைப்பை ஓரளவு படித்துக் கொள்வேன்.

ஒருநாள் இவ்விதம் தங்க நேர்ந்தபொழுது, இரண்டு வெள்ளையர்கள், “தொரை” என அழைத்துக் கொண்டு

வந்தார்கள்.

செம்பட்டைத் தலை; வெளிர் நிறம். ஆனால் சாரம் அணிந்திருந்தனர். வெள்ளைக்காரர்கள் எம்மைப் போன்று சாரம் அணிவார்களா? அந்த இருவரும் எனக்கு விநோதமாகக் காட்சி அளித்தனர். எனினும், அதற்கு விடை தேடும் ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். அந்த இரண்டு வெள்ளைத் தோல்களும் சரளமாகத் தமிழ் பேசினார்கள்.

கந்தசாமி இருவரையும் ராமு, பாலு என அறிமுகப் படுத்தினார். எனக்கு மேலும் அதிர்ச்சியாக இருந்தது. அங்கு வந்த ராமுவும்-பாலுவும் சொன்ன தகவலினால், நான் கந்தசாமியுடன் எனது மருந்துப் பெட்டி சகிதம் தொழுவம் பக்கம் செல்ல நேர்ந்தது.

தகவல் இதுதான்:- தொழுவத்தில் பொன்னி பசுமாடு கன்று போடுகிறது. ஆனால் தலை முதலில் வராமல் கால்கள் மாத்திரம் வெளியே தெரிகின்றன. பிரசவம் சிரமமாக இருக்கும். தொழுவத்தில் பொன்னி நிலத்தில் கிடந்தவாறு முனகிக் கொண்டிருக்கிறது.

கால்கள் மட்டும் வெளியே தெரிகின்றன. தாயையும் கன்றையும் காப்பாற்ற வேண்டும். பன்னீர்க்குடம் உடைந்து ஐந்து நிமிடம் தான் இருக்கும். இரவு நேரமானபடியாலும் அந்தத் தொழுவத்தில் மின்சாரமும் இல்லாதமையாலும் ஒரு பெட்ரோமாக்ஸையும் சுடுநீரையும் கேட்டேன்.

வந்தன.

மணிக்கயிறும் கேட்டேன்.

தந்தார்கள்.

எனது உடையை மாற்றிச் சாரம் அணிந்து கொண்டு, பொன்னியின் முள்ளந்தண்டில் விறைப்பு ஊசி மருந்தை ஏற்றினேன். 'இதுதான் Breech நிலைப்பாடு' என கூறியபடி சவர்க்காரம் கலந்த தண்ணீரை பொன்னியின் சனன

துவாரத்தின் ஊடாகத் தொடர்ந்து செலுத்திக் கன்றின் வாலை வெளியே கொண்டு வந்தேன்.

மணிக்கயிறைக் கன்றின் இருகால்களிலும் கட்டி ராமு பாலுவிடம் கொடுத்து மெதுவாக இழுக்கச் சொல்லிவிட்டு, பொன்னியின் சனன துவாரம் ஊடாகச் சவர்க்காரத் தண்ணீரைத் தொடர்ந்து செலுத்திக் கைகளினால் கன்றை மெதுவாக அசைத்து வெளியே கொண்டு வந்தேன். சுமார் பதினைந்து இருபது நிமிடப் போராட்டத்தின் பின்பு கறுப்பு-வெள்ளை நிற ஆண் கன்று வெளியே வந்தது.

கன்றின் பின்னங் கால்களைப் பிடித்துச் சுற்றியபடியே, "பொன்னி போன்ற சிறிய பசுவுக்கு ஏன் freshian இனப் பெரிய காளையைச் சினைப்படுத்தப் பாவித்தீர்கள்?" எனக் கேட்டேன்.

தோட்டத்துரை கந்தசாமி என் முகத்தை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, "இந்த ராமுவும், பாலுவும்தான் இதற்குக் காரணம். கலப்பு இன விருத்தி செய்வதாகச் சொல்லிப் பக்கத்துத் தோட்டத்திலிருந்த ஒரு காளை மாட்டைப் பிடித்து வந்திருந்தார்கள்.

தமது தவறை ராமுவும் பாலுவும் ஒப்புக் கொண்டனர்.

பொன்னி எழுந்து நின்று சலம் விட்டு இளங் கொடியையும் போட்டது. "இனிப் பிரச்சினை இல்லை" யென்று சொல்லிவிட்டு, பங்களாவினுள் சென்று அந்த வெள்ளைத் தோல், ராமு, பாலுவின் கதையைச் சொல்லுமாறு கந்தசாமியிடம் கேட்டேன்.


"முப்பது ஆண்டுகளின் முன்பு Scotlandஐ சேர்ந்த ஒருவர் இந்தத் தோட்டத்துக்குச் சுப்பிரிண்டனாக வந்தபொழுது இங்கு கொழுந்து பறித்துக் கொண்டிருந்த மாரியம்மா என்ற பெண்ணுடன் உறவுவைத்து அவளைத் தமது சொந்த மனைவியாகப் பராமரித்தார். அந்தக் குடும்பத்தில் பிறந்தவர்களே இந்த இரட்டைப் பிள்ளைகள்.

"இவர்களுக்கு நான்கு வயதிருக்கும் போது அந்த ஸ்கொட்லாண்ட்வாசி விடுமுறையில் இங்கிலாந்து சென்ற சமயம் அங்கு வாகன விபத்தில் இறந்துவிட்டார்.

"மாரியும்மா இந்தத் தோட்டத்தில் கொழுந்து பறித்து இவர்களை வளர்த்து ஆளாக்கினா."

கந்தசாமி கதையைச் சொல்லிமுடித்தார். கலப்பு இன விருத்தியில் பிறந்த ராமுவும், பாலுவும் பொன்னி மூலம் ஒரு கன்றை கலப்பு இனவிருத்தியில் பெற்றுக் கொள்ள முயன்றமை வியப்பல்ல.

❒



# 3

# ராமசாமி கோனாரின் கவலைக்கு மருந்து

தமிழ் நாட்டில், மகாபலிபுரத்திற்கும் தாம்பரத்திற்கும் இடையே பசுமை கொழிக்கும் அயனாவரம் என்ற சிற்றூர். ஒரு பக்கத்தில் சிறிய மலைத்தொடர். மறு பக்கத்தில் நீர் நிரம்பிய ஏரி. இச்சிற்றூரில் சுமார் 150 ஏக்கரில் மாடுகள், ஆடுகள், கோழிகள் பராமரிக்கப்படும் பெரிய பண்ணை.

மாரிகாலத்தில் ஏரியில் நீர் நிரம்பினால் பண்ணை வீட்டு வாயிலை ஏரி மீன்கள் வந்து கவ்வும். இயற்கை அழகு செழித்த அந்த ஊரில் 86ஆம் ஆண்டளவில் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இந்தப் பண்ணையின் சொந்தக்காரர் எப்போதாவது வருவார்; போவார். இப்பண்ணையின்

முகாமையாளர், மிருக வைத்தியர் முதலான பொறுப்புகளை நானே சுமக்க நேர்ந்தது.

ஆண்களும் பெண்களுமாக சுமார் ஐம்பது பேர்வரையில் அயல் கிராமங்களிலிருந்து இங்கு வந்து காலை எட்டு மணி முதல், ஐந்துமணி வரையில் வேலை செய்வார்கள். பசுமாடுகளிலிருந்து பால்கறக்கும் வேலையைச் செய்பவர் ராமசாமி கோனார். வயது இருபத்தைந்து இருக்கும். எனக்குப் பண்ணையில் வலது கரமாக இயங்குவார். எனக்கு அடுத்தபடியாக அங்கு வாழ்ந்த நூற்றுக் கணக்கான மாடுகளைப் பற்றிய நெருக்கமான அறிவுள்ளவர்.

பண்ணையில் பல காளை மாடுகளும் இருந்தன. அந்தப் பண்ணையில் நான் வேலைக்குச் சேர்ந்த பின்பு மூக்கன் எனப்படும் ஜெர்சி இனக் காளை மாட்டை வாங்கினோம். அங்கு எம் எல்லோருக்கும் பிடித்தமான 'இலட்சுமி கன்று' பசுவாகியதும் அதனைக் கர்ப்பமாக்க முயற்சி எடுத்தோம்.

லெட்சுமியும் - மூக்கனும் ஜெர்சி இனம். இது இங்கிலாந்து இனம். மாடுகளிலும் இன வேறுபாடு உண்டு. தமிழ் நாட்டில் மாடுகளுக்கு பெயர் வைப்பது வழக்கம். அவற்றின் நிறம் குணம் பார்த்து பெயரிடுவது தமிழ்நாட்டு மக்களின் இயல்பு.

லட்சுமிக்கு ஒரு வருட காலமாக சினைபற்றவில்லை. அதன் மலவாசல் ஊடாக கர்ப்பப்பையைச் சோதனை செய்த பொழுது ராமசாமி கோனாரிடம் "சவர்க்காரம் எடு" என்றேன்.

"சோப்பு என்று தமிழில் சொல்லலாம்தானே சார்" என்றான். தமிழ் நாட்டின் பேச்சுமொழி வழக்குப் பற்றியே நிறைய எழுதலாம். ராமசாமி கோனார் 'சோப்பு' என்ற சொல்லைத் 'தமிழ்' என்று சொன்ன பொழுது சிரித்தேன்.

லட்சுமி பசுவை நான் சோதித்துக் கொண்டிருந்த போது "... சார்.... லட்சுமி நம்ம வீட்டுக்காரி மாதிரி சார்...

அதற்குச் சினை பிடிக்காது..." என்றான் ராமசாமி கோனார்.

"ஏன்" என்று திடுக்கிட்டுக் கேட்டேன்.

"நானும் ஐந்து வருஷமாகப் பார்க்கிறேன் சார். பிள்ளைப்பாக்கியம் இல்லை" என்றான்.

"ராமசாமி... அதற்கு உன் மனைவி மட்டுமல்ல... நீயும் காரணமாக இருக்கலாம். எதற்கும் ஒரு டாக்டரைப் போய் பாருங்கள்" என்று அவனுக்கு ஆலோசனை கூறினேன்.

"எதுவும் நடக்காது சார்- என்னை வேறு பெண்ணைப் பார்த்துக் கட்டச் சொல்றா என்ர அம்மா" என்றான் ராமசாமி கோனார்.

"உனக்கு வேறு பெண்மீது ஆசை இருந்தால் அதற்காக அம்மாவைச் சாட்டுக்கு இழுக்காதே. எதற்கும் முதலில் ஒரு டாக்டரைப் பார்" என்றேன்.

பண்ணையில் சினைப் பிடிக்காத லட்சுமி பசுவை சோதித்த பின்பு, காளையின் விந்தை எடுத்து சோதனைக்கு அனுப்பிப் பார்த்தேன். அதன் விந்து எண்ணிக்கை குறைவு என்று வந்தது. பின்பு விவசாய திணைக்களத்திடமிருந்து ஜெர்சி இனத்துக்குரிய விந்தை எடுத்துச் செயற்கை முறையில் லட்சுமி பசுவ்க்குச் செலுத்தினேன்.

மூன்றாவது மாதம். ராமசாமி கோனாரிடம், "லட்சுமியை சோதிக்க சவர்க்காரம் எடுத்துவா" என்று சொன்னபோது, மீண்டும் "சோப்பு" எனச் சொல்லிக் கொண்டு வந்தான். தமிழ்நாட்டில் ஒரு தமிழ்ச் சொல்லைத் தெரிந்துகொண்ட புளகாங்கிதத்துடன், லட்சுமியை சோதித்து அது கர்ப்பமாகியுள்ள தகவலை ராமசாமி கோனாருக்குச் சொன்னேன்.

"அப்படியா சார்" என்று என்னை வியப்புடன் பார்த்தான். "நீயும் ஒரு டாக்டரைப் போய் பார்" என்றேன்.

அவன் வெட்கத்தால் தலைகுனிந்தான்.

❒



# 4



# என்னை விட்டு ஓடிப் போக முடியுமா?

என் வீட்டில் வளரும் நாயின் கதை சுவாரஸ்யமானது.

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, நான் பணியாற்றிய மிருக மருத்துவமனையில், பரபரப்பான பகல் பொழுது, Preston பகுதியிலிருந்து அம்புலன்ஸ் மூலமாக வந்து சேர்ந்தது அந்த நாய்.

பொன் நிறம். நாலுமாத வயது. Labrador இனம். எனது சோதனை மேசையில் ஏறி வாலை ஆட்டி என் முகத்தை நக்கித் தடவ முயன்றது. உடலில் எந்த விதமான கோளாறும் இல்லை. என்னையும் அது கவர்ந்தது. இந்த அழகிய நாய்க்குட்டி எப்படி வீதிக்கு வந்தது? இதன் எஜமான்

அல்லது எஜமானி யாராக இருக்கும்? "அநாதரவாக வீதியில் கண்டெடுக்கப்பட்டு வந்து சேர்ந்த அந்தக் குட்டியை, எவரும் உரிமைகோரி வந்து பெற்றுச் செல்லாவிட்டால், அதனை நானே எடுத்துக் கொள்வேன்" என்று கூறி மருத்துவமனையில் என் பெயரைப் பதிவு செய்துகொண்டேன்.

என்னைப் போன்றே இங்கு பணிபுரிந்த வேறு சிலரும் அதனை "கவர்ந்து கொள்வதற்காக" தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளனர் என்ற விபரம் பின்னர் அறிய முடிந்தது.

ஐந்தாம் நாளன்று நாயைக் காணவில்லை. ஒரு பெண்வந்து அடையாளம் கூறி, அது தனது நாய்தான் என்று உரிமை கொண்டாடி, எடுத்துச் சென்றதாக கூறினார்கள்.

"சரி . போகட்டும்; எனக்கு அவ்வளவுதான் அதிர்ஷ்டம்" என்று மனதிற்குள் என்னை நானே தேற்றிக் கொண்டேன். அத்துடன் அந்த நாயை மறந்தேவிட்டேன். 'கிட்டாதாயின் வெட்டென மற' என்று சொல்லுவார்களே!

நாட்கள் ஓடி மறைந்தன. மூன்று மாதங்களாகியிருக்கும். எனது பரிசோதனை அறையிலிருந்து கொண்டு, அடுத்த சோதனைக்காக, "Mrs.Barns" என்று பெயர் சொல்லி அழைத்தேன்.

ஒரு முப்பது வயதுப் பெண் தனது நாயுடன் உள்ளே வந்தாள். சற்று வளர்ந்த Labrador இனத்து நாய். கவனத்தை ஊன்றிப் பார்த்த போது என் நினைவிலிருந்து மறைந்த அதே நாய்தான் என்பதை உணர அதிக நேரம் பிடிக்கவில்லை.

எனது பழைய அந்த எதிர்பார்ப்புகளை புறம் ஒதுக்கிக் கொண்டு, "நாய்க்கு என்ன?" எனக் கேட்டேன்.

"இது எனது நாய். தற்போதைய சூழ்நிலையில் இதனை நான் பராமரிக்க முடியாதுள்ளது. எங்காவது ஒரு நல்ல குடும்பத்தில் இது வளர வேண்டும். அதற்கு உதவி செய்வீர்களா?" எனக் கேட்டாள்.

பெயரைக் கேட்டேன்.

"சண்டி."

"ஏதாவது கூடாத பழக்கம் உண்டா?"

"அப்படி ஒன்றும் இல்லை. கதவு திறந்திருந்தால் வெளியே ஓடிவிடும். பின்பு தேடிப் பிடிப்பது சற்றுச் சிரமம். மூன்று மாதங்களுக்கு முன்பும் காணாமல் போனது. உங்கள் மருத்துவமனையில் தான் பின்பு விசாரித்துக் கண்டெடுத்தேன்."

இப்படி அவள் சொன்னதும் எனது உணர்வு ஊர்ஜிதமானது.

"சரி... இவ்வளவு காலமும் உங்களிடம் வளர்ந்த நாயை இப்போது ஏன் எவருக்கேனும் ஒப்படைக்க வேண்டும் என்று முடிவு செய்கிறீர்கள்?" எனக் கேட்டேன்.

"டொக்டர்... நானும் கணவனும் பத்து வருடகாலமாக ஒன்றாகத்தான் வாழ்ந்தோம். எமக்குப் பிள்ளைகள் இல்லை. இதனால் 'சண்டியை' எடுத்து வளர்த்தோம். என்ன துன்பமோ, எங்கள்வாழ்வில் சோதனை வந்துவிட்டது. என் கணவருக்கு வேறு ஒரு பெண்ணுடன் உறவு ஏற்பட்டு விட்டது. இதனால் இப்போது விவாகரத்துக்கு தயாராகி விட்டோம். வீடும் விற்கும் நிலையில் உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் நாயை வளர்ப்பது சிரமம்."

அவள் கண்கலங்கினாள்.

நாயைத் தாரை வார்த்துக் கொடுப்பதன் பின்னணியில் ஒரு சோகமான கதையே இருந்தது. அந்தப் பெண்ணுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறித் தேற்றினேன். அவளது கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டேன்.

"கவலைப்படாதீர்கள். உங்கள் நாய் நல்ல பராமரிப்புடன் வளரும். முடிந்தால் நானே எடுத்து வளர்ப்பேன்."

"மிக்க நன்றி டொக்டர்".


அவள் நா தழுதழுத்த நிலையில் விடைபெற்றாள்.

அவளுடைய 'சண்டி', அதே பெயருடன் இப்போது எங்கள் வீட்டில் வளர்கின்றது.

❐

௨

# இரத்த தான மகிமை




பிராணிகளிடம் விநோதமான குணங்கள் உண்டு. எங்கள் வீட்டு நாய் – சண்டியும் இதற்கு – விதிவிலக் கல்ல.

திடீரென்று மாயமாகிவிடும். தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். சண்டி எம்மிடம் வந்து சேர்ந்த கதையை முன்னர் எழுதிவிட்டேன். மாயமாகித் தேடி அலைந்த கதை ஒரு புறமிருக்க, எதனையும் சாப்பிடும் இயல்பும், அதன் பிறவிக் குணமாகியது தான் ஆபத்தானது.

வீட்டைவிட்டு ஓடி மாயமாவது, காண்பதையெல்லாம் உண்பது. இந்த குணங்கள் மனிதர்களுக்கு மட்டுமல்ல, வாய்பேசாத உயிரினங்களுக்கும் ஏற்புடையதல்ல.

எங்கள் 'சண்டி'யின் இந்த குண இயல்புகளினால் நாங்கள் பல சந்தர்ப்பங்களில் சங்கடங்களை எதிர்நோக்கியுள்ளோம். எமது வீட்டுச் செல்லப்பிராணியாக வளர வந்த ஒரு மாத காலத்தில், ஒரு நாள் வீட்டுக்குப் புல்வெட்ட வந்தவர், பின் வளவுக் கதவை மூடாமல் சென்றதன் விளைவு சண்டி மாயமாகிவிட்டது.

இரண்டு நாள்களாகத் தேடி அலைந்தோம். R.S.P.C.A., நகரசபை, Dog Pound இப்படி எல்லா இடங்களிலும் தேடிக் களைத்து ஓய்ந்து, அருகில் உள்ள Milk Bar களில் விளம்பரம் ஒட்டி, நாயைக் கண்டு பிடித்து தருவோருக்கு சன்மானம் தரப்படும் என்றும் அறிவித்தோம்.

மூன்றாவது நாள் தொலைபேசியில் கிடைத்த தகவலையடுத்து மூன்று மைல் தொலைவில் உள்ள வீட்டுக்குச் சென்றோம்.

"இரண்டு நாட்களாக எங்கள் வீட்டு நாயுடன் விளையாடிக் கொண்டிருந்தது. ஆனால் சுமார் அரைமணி நேரத்திற்கு முன்பு Garden Shed இனுள் புகுந்து நத்தைக்கு வைக்கப்பட்ட விஷமருந்தைச் சாப்பிட்டுவிட்டது. நாம் மிருக வைத்தியரிடம் கொண்டு சென்றுள்ளோம். அங்கே போனால் பார்க்கலாம்." என்றார்கள்.

குறிப்பிட்ட Vet Dispensaryக்கு சென்ற போது, அங்கே எங்கள் சண்டி அரை மயக்கத்தில் வாலை ஆட்டியவாறு பாதிமூடிய கண்களால் எங்களைப் பார்த்தது.

குணமாகி வீடு திரும்பியது.

வீட்டில் கால் மேசுகள், சொக்கலேட் அடிக்கடி காணாமல் போகும். சமிபாடடையக் கூடியவை தவிர்ந்து ஏனையவை வீட்டின் பின்பகுதியை சுத்தப்படுத்தும் சமயங்களில் காணப்படும். மேலும் சமையலறையில் உணவுப் பொருள்கள் பதார்த்தங்கள் நிலத்தில் சிந்திவிட்டால் நாம் Hoover பிடித்து சுத்தம் செய்வதற்கு முன்பே சண்டி Hooverஆக மாறி உட்கொண்டு சுத்தம் செய்துவிடும்.

கண்டதையும் உண்டு சங்கடப்படுத்தும் சண்டி, அண்மையிலே யாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போன்று ஒரு காரியம் செய்து, எமலோகத்திற்குப் புறப்பட்டு பாதி வழியில் திரும்பிப் பூலோகத்திற்கே வந்தது.

எலிகளின் தொல்லையை தாங்க முடியாமல் Pest Control செய்பவர்களை அழைத்தோம். அவர்களின் ஆலோசனைப் பிரகாரம் எலிப்பாஷாணத்தை வீட்டின் கூரை, மற்றும் சுவர் மூலைகளில் வைத்தோம். இவ்விதம் எலிப் பாஷாணத்தை வைப்பதற்கு முன்பு, "நாய் அதனைத் தீண்டாதா?" எனவும் கேட்டோம்.

அவர்கள் "இல்லை" என்றார்கள்.

ஆனால் நடந்ததோ வேறு.

எங்கள் சண்டி, எலிப்பாஷாணம் வைத்து ஒரு வாரம் கழித்து ஒருநாள், உணவு ஏதும் உண்ணாமல் சேர்ந்து கிடந்தது. இன்று விட்டால், நாளை சாப்பிடும் தானே என்று அசட்டையாக இருந்துவிட்டோம்.

இரண்டாம் நாளும் ஏதும் உண்ணாமல் சோர்ந்து கிடந்தது. என்னைக் கண்டு வாலை ஆட்டியது. வேலைக்குச் சென்று மாலை திரும்பி வந்து பார்த்தேன். இப்போது வாலும் ஆடவில்லை.

"ஓ... ஏதோ கவலைக்கிடமாக நிலைமைதான்" என்பதை சட்டென புரிந்துகொண்டு, சண்டியின் நாக்கையும் கண்களையும் பார்த்தேன். வெளிறிப் போயிருந்தது.

காரணம் விளங்கிவிட்டது. முன்பு அந்த வீட்டில் நத்தைக்கு வைத்த விஷம் சாப்பிட்டது போன்று இப்போது எமது வீட்டில் எலிக்கு வைத்த விஷம் சாப்பிட்டு விட்டது.

சண்டி பிழைப்பதாயின் இரத்தம் ஏற்ற வேண்டும்.

சண்டியைக் காரில் ஏற்றிக் கொண்டு, முன்னர் நான் பணிபுரிந்த மிருக மருத்துவமனைக்கு விரைந்தேன். சுமார் ஆறு மணித்தியாலமாக இரத்தம் ஏற்றப்பட்டது. நாய்

வா-2

இரத்தம்தான், மனித இரத்தம் அல்ல. நாய் இரத்தம் எவ்விதம் சேகரிக்கப்படுகிறது என்று நீங்கள் கேட்கலாம்.

நாய்கள் இரத்ததானம் செய்கின்றன.

எப்படி?

அநாதரவாக வீதிகளில் திரியும் நாய்கள், பராமரிக்க எவரும் இல்லாத நிலையில் கருணைக் கொலை செய்யப் படுவதுண்டு. அவ்விதம் இறக்க முன்பு அத்தகைய நாய்களிடமிருந்து இரத்தம் சேகரிக்கப்படும்.

யாரோ முகம் அறியாதவர்களிடம் வாழ்ந்து அநாதரவான நாய்களின் இரத்தம் எங்கள் சண்டியைக் காப்பாற்றியது. சண்டி மறுநாள் சுகமாக வீடு திரும்பியது. எனினும், எலிப்பாஷாணம், நத்தை விஷம் அதனை அண்டாமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் கவலையாக மனதை அரிக்கிறது.

❐



# 6 இது ஒரு வகை வசியம்



இரவு பத்துமணி

மெல்போனில் குளிரும், மழையும் சயாமிய இரட்டையர்களாக வந்து போகும். மிருக வைத்தியசாலையில் எலும்பை விழுங்கிய நாயைப் பரிசோதித்துக் கொண்டிருந்தேன். அது ஒரு சீன தம்பதியரின் ஆசை பொமனேரியன். அதன் வாய்க்குள் இருந்த எலும்பை எடுத்துவிட்டு அவர்களிடம், 'என்ன எலும்பு கொடுத்தது' என்று கேட்டேன்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர்.

நிச்சயமாக அது பூனை அல்லது நாய்க்குட்டியின் தாடை எலும்புத் துண்டு. அது அவர்களது அன்றைய மதிய உணவாக இருந்திருக்க வேண்டும்.

ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "இனிச் சமைத்த எலும்பு கொடுக்க வேண்டாம்" என்று சொல்லி யனுப்பினேன். இந்த சுவையான சம்பவத்தை நர்சுக்குச் சொல்லிச் சிரிக்க நினைத்தபோது ஸ்ரீவன் (nurse) எனக்கு பொலிசில் இருந்து தகவல் வந்திருக்கிறது எனப் பரபரத்தான்.

"என்ன விடயம்?"

"Westgate bridgeற்குச் சிறிது தூரத்தில் நடந்த பெரிய விபத்து ஒன்றில் மூன்று பிள்ளைகளும், பெற்றோரும் வந்த கார் சாலை ஓரத்தில் மோதியதால், இரண்டு குழந்தைகளும் தந்தையும் இறந்துவிட்டார்கள். பொலிஸ் அம்புலன்ஸ் எல்லாம் ஸ்தலத்தில் நின்ற போதிலும் எவராலும் அந்தக் காரை நெருங்க முடியவில்லை."

"ஏன்?"

"அவர்களது நாய் (Bull - Terrior) எவரையும் நெருங்க விடாமல் கடிக்க எத்தனித்துக் கொண்டிருக்கிறது..."

"துப்பாக்கியால் சுடமுடியாதா?"

"தாய்க்கும் பிள்ளைக்கும் இடையில் நின்று அவர்களைப் பாதுகாப்பதாக நினைக்கிறது. சுடுவது ஆபத்து என நினைத்து எங்களை கூப்பிட்டிருக்கிறார்கள்."

ஆஸ்பத்திரியை மூடிவிட்டு எப்படிச் செல்வது என யோசித்தாலும், முடிவில் மனித உயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உடன் செல்ல முடிவு செய்தோம்.

ஸ்ரீவன் மிகுந்த பரபரப்புடன் மயக்க ஊசிமருந்துகள், Blanket. மற்றும் நாய்க்குச் சுருக்குப் போடும் உபகரணங்களுடன் என்னுடைய காரை அடைந்தான்.

மழை பெய்து கொண்டிருந்தது.

வெளிச்சம் தெளிவாக இல்லை. ஆனாலும் வேகமாகச் சென்றோம். ஸ்ரீவனுக்கு Action Pack படத்தின் கதாநாயகன் நினைப்பு. இரண்டு மைல் தொலைவிலே Freeway இரண்டு பக்கமும் மூடப்பட்டிருந்தது.

பொலிசாரிடம் எம்மை அடையாளம் காட்டியதும் உடனே போகச் சொல்லிவிட்டார்கள். அவர்கள் போகச் சொன்ன பாதை எதிர்ப் பகுதிக்குச் செல்ல வேண்டி இருந்ததால் தயக்கத்துடன் வண்டியைச் செலுத்தினேன்.

“இதுதான் என்றுமில்லாதபடி முதன் முதலாகப் பொலிசார் எதிர்ப்பாதையில் செல்லும்படி கூறுவது” என ஸ்ரீபன் நகைத்தான்.

கடைசியாக விபத்து நடந்த இடத்தை அடைந்தபோது, பிரகாசமான வெளிச்சத்தில் அந்தப் பயங்கரக்காட்சி தெளிவாகத் தெரிந்தது.

காரின் முன்பகுதி காற்றுப்போன இரப்பர் பந்துபோல் உள்வாங்கி இருந்தது. ஒரு குடும்பம் இரத்தம் சிந்திய நிலையில் காரில் இருந்தது. வெள்ளை நிற நாய் அவர்களுக்கு நடுவில் சுற்றி நின்றோரைப் பயமுறுத்தியும் குரைத்துக் கொண்டும் நின்றது.

ஸ்ரீபன் சுருக்குத் தடியுடனும், நான் மயக்க மருந்து நிறைந்த ஊசியுடனும் காரை விட்டு இறங்கியபோது சகலரும் எமக்கு வழிவிட்டனர்.

உடைந்த கண்ணாடிக் கதவினூடாக சுருக்குக் கயிறுள்ள தடியைச் செலுத்தி கழுத்தில் போட்டான். ஆரம்பத்தில் முரண்டு பிடித்த நாய் கதவினூடாக பாய்ந்து வந்து ஸ்ரீவனின் காலை நக்கியது.


எனது மயக்க மருந்துக்கு வேலை இருக்கவில்லை. சுற்றி இருந்தவர்கள் ஏதோ தேவலோகத்தில் இருந்து

வந்தவரைப் போல் எம்மைப் பார்த்து விட்டு மீட்பு வேலையில் இறங்கினார்கள். நாயை எனது காரில் ஏற்றிக் கொண்டு வந்தோம்.

"Job done well" என்று ஸ்ரீவனுக்குச் சொன்னேன்.

'Bloody TV Crew இன்று வரவில்லை' என்று கவலை யுடன் சொன்ன ஸ்ரீவன், நாயின் தலையைத் தடவியபடி முன்சீட்டில் உட்கார்ந்தான்.

❐



# 7

# அலர்ஜி : புதிய விளக்கம்

கடந்த நான்கு வருடங்களாக விவியனின் இரு நாய்களுக்கும் சிகிச்சை அளித்து வருகிறேன். ராணிக்கு நான்கு வயது குட்டியாக இருந்தபோது தடுப்பூசி போட்ட காலத்தில் இருந்து எனக்கு தெரியும். எனது பரிசோதனை மேசையில் ஏறியவுடன் மிகவும் சாவகாசமாக இருந்து என் கைகளையும் ஏன் முகத்தையுடம்கூட நக்க முயலும். பொப்பி வயதான திபெத்தியன் ரெரியர் எனப்படும் நாய். எனது விரலைக் கடித்து ருசி பார்க்க விரும்பும். நகம் வெட்டுவது போன்ற சிறிய வேலைகளுக்குக்கூட மயக்க மருந்து கொடுக்க வேண்டும்.

இதைவிடப் பல வருடங்களாகத் தோல் வியாதியில் துன்பப்படும். வெயில் காலத்தில் மிகவும் மோசமாகிவிடும். தன்னையே கடித்து குதறி உடலில் உள்ள மயிர்களை புடுங்கி எடுப்பது வழக்கமாகும். ஏதோ அலர்ஜி என்று தெரியும். ஆனால் எதற்கு என சரியாக தெரியாததால் தெள்ளுக்கு மருந்து, சாப்பாட்டை மாற்றுதல், போன்ற பலவற்றால் தோல் வருத்தத்தை குறைக்க முடிந்தது. ஆனால் முற்றாகச் சுகமாக்க முடியவில்லை.

ஆறு மாத இடைவெளிக்குப் பின் தனது பொப்பி, ராணியுடன் தடுப்பூசி போடுவதற்காக விவியன் வந்தார். வழமையான கரு நிறமான கூந்தல் மிகவும் அழகாக வெட்டப்பட்டு, பொன்னிறத்தில் இருந்தது. உதட்டுச் சாயத்தில் என்முகம் பார்க்கலாம் போன்று மின்னியது. இவ்வளவு நாளும் விவியனைக் கூர்ந்து கவனித்தது கிடையாது.

கார்களில் பின்பகுதியில் ஒரு கரும்புள்ளி (Black Spot) உண்டு. அதில் வரும் கார்களைத் தெரியாது. இதே போன்று ஆண்களும் பெண்களும் ஒரு காலத்தின் பின் அந்த கருமை பகுதிக்குப் போவதைத் தவிர்க்க முடியாது.

இவ்வளவு காலமும் தெரியாத ஒளி விவியனின் முகத்தில் தெரிந்தது. விவியனுக்கு நான்கு வளர்த்த பெண் பிள்ளைகள். எனக்கு நன்கு தெரியும். அவர்களும் பலமுறை தங்கள் நாயுடன் வந்திருக்கிறார்கள்.

"எப்படி விவியன்?"

"நல்லம். பொப்பிக்கும், ராணிக்கும் வருடாந்த தடுப்பூசி போடவேண்டும்."

இரண்டு நாய்களையும் பரிசோதித்துத் தடுப்பூசி போட்டேன். வழக்கத்துக்கு மாறாகப் பொப்பியின் தோல் அழகாகவும், எந்தத் தோல் வருத்தத்திற்கான அறிகுறியும் இல்லாமல் இருந்தது.

"விவியன் பொப்பியின் தோல் நல்லாக இருக்கிறது, என்ன விசேடம்? சாப்பாடு அல்லது சூழ்நிலையில் மாற்றமா?" என்று கேட்டேன்.

"விசேடமாக ஒன்றுமில்லை. என் கணவர் இப்பொழுது எங்களுடன் இல்லை. இதைவிட எதுவும் கிடையாது." என்றாள். உள்ளுக்குள் திடுக்கிட்டு இருந்தாலும், நாயைப் பார்த்தபடி, "அப்படியா?" என்றேன்.

சில கணநேரத்தில் விவியனின் கண்ணை நேரடியாகப் பார்த்தபொழுது, ஏதோ சொல்லத் துடிப்பது கண்களில் மட்டுமல்ல, உதடுகளில் மெல்லிய அசைவாகத் தெரிந்தது.

"தனிப்பட்ட விடயத்தைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு மன்னிக்கவேண்டும். ஆனாலும், உன்னில் மாற்றம் தெரிகிறது. ஆனால் இந்த மாற்றம் உனக்கு நன்றாக இருக்கிறது என்றுமட்டும் நான் நினைக்கிறேன்."

நான் இவ்வளவு சொன்னதும் வார்த்தைகள் வெள்ளமாக, வேகமாக வந்தன.

"எனக்கும் என் கணவருக்கும் 25வருட திருமண உறவு. இதைவிட ஏழு வருடங்கள் திருமணம் செய்யும் முன்பு ஒன்றாக இருந்தோம். இந்த 32 வருட கால உறவை விட்டு விட்டு, எங்களுக்குச் சொந்தமான கவேயில் வேலை செய்த Bimbo (அழகான அறிவற்ற பெண்) உடன் சென்றுவிட்டார். ஆறுமாதங்கள் எனக்குத் தெரியாமல் அந்த Bimboவுடன் உறவு வைத்திருக்கிறார். இதைவிட எனக்கு ஆத்திரம் ஊட்டுவது, அந்த Bimboவுடன் இலண்டனுக்கு விடுமுறையில் சென்றுவிட்டார்.

"என் கணவர் எனக்குச் செய்த துரோகத்தை விட எனது நாலு பிள்ளைகள் செய்வதுதான் எனக்குத் தாங்க முடியவில்லை. ஆரம்பத்தில் என்னை ஆதரித்து அப்பாவுடன் சண்டை போட்டவர்கள்; தற்பொழுது தகப்பனுக்காகப் பரிந்து பேசுகிறார்கள்."

"கவலைப்பட வேண்டாம். பிள்ளைகள் உங்கள் பிரிவில் பக்கம் சேர விரும்பவில்லை. மேலும் இரண்டு பக்கத்திலும் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய விரும்புவதும் வழக்கமானது."

"நான் கவலைப்பட்டு முடிந்துவிட்டது. தற்பொழுது எனது வாழ்க்கையில் ஒருவர் வந்துள்ளார். நாகரீகமானவர் போல் தெரிகிறது."

"ஒரு கதவு மூடும்போது யன்னல் திறப்பது வழக்கம்."

"என் கணவர் என்னை விட்டுப் போனதால் பொப்பிக்கு தோல்வருத்தம் குணமாகிவிட்டது."

"என்னால் எதற்கும் மருத்துவரீதியில் விளக்கம் கூறமுடியாது. ஆனாலும் பலவருட வியாதி மாறியது அதிசயம்தான்."

"எனக்கும், பொப்பிக்கும் என் கணவர் போனது நல்ல காலம்தான்" எனக் கூறியபடி விடைபெற்றார்.

உறவுகள் மட்டும்தான் இன்பத்தைக் கொடுக்கும் என்று நினைத்திருந்த எனக்கு, விவியனும் பொப்பியும் சில பிரிவுகள்கூட சந்தோசத்தையும் சுகத்தையும் அளிக்கும் என்கிற செய்தியையா கூறிச் சென்றார்கள்?

❒



# 7 அங்கத்திலே ஒரு குறையிருந்தாலும்...

மெல்பன் பொலிஸ் இலாகாவில் பணிபுரியும் சிமித் தம்பதியரின் செல்லப் பிராணி பூனை. பெயர் ரைகர்.

பக்கத்துவீட்டு நாய், சிமித் வீட்டினுள் அத்துமீறி நுழைந்தது மல்லாமல், அவர்களின் அருமையான பூனையையும் கடித்துப் பதம் பார்த்து விட்டது.

"பக்கத்து வீட்டு லிண்டா அந்த நாயின் சொந்தக்காரி; Single Mother. தன் பிள்ளைகளையே பொறுப்பாகக் கவனிப்பதில்லை. இந்த இலட்சணத்தில் தனது நாயை மாத்திரம் பொறுப்போடு கவனிப்பாளா?" — இது திருமதி சிமித்தின் வாதம்.

Single Mother வாழ்வு வாழும் பெண்கள்மீது வித்தியாசமான பார்வை கொள்பவர்களின் சராசரிக் கணிப்புடன் அவளைத் திட்டிக்கொண்டிருந்தாள் திருமதி சிமித்.

சிமித்தின் பூனையை மேசையில் ஏற்றிப் பரிசோதித்தேன்.

அதன் வலது பின்னங்காலில் இரண்டு முறிவுகள். அதன் இடுப்பின் கீழும் பாதங்களிலும் உணர்ச்சி இல்லை. எலும்பு முறிவைச் சிறு சத்திரசிகிச்சை மூலம் சுகப் படுத்தலாம். ஆனால் காலில் நரம்பு இயங்காவிட்டால் பலன் இல்லை.

நிலைமைகளைச் சோதனையின் பின்பு சிமித்திடம் கூறினேன்.

"எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை காலை fix பண்ணிவிடுங்கள்." அவள் அழாத குறையாகக் கெஞ்சினாள்.

"எலும்பைப் பொருத்தலாம். நரம்பு இயங்காது போனால் பூனையால் நடக்கவும் முடியாதே" என்று விளக்கினேன். சிமித் ஆத்திரமுற்றான். பக்கத்து வீட்டுக்காரிக்கு எதிராக 'கேஸ்' போடப் போவதாகவும், 'கவுன்ஸி'லில் முறையிடப் போவதாகவும் பொரிந்து தள்ளினாள்.

"சட்டப்படி அந்தப் பக்கத்து வீட்டுக்காரிதான் உங்கள் பூனையின் மருத்துவச் செலவுகளை பொறுப்பேற்க வேண்டும். இல்லாவிடில் நீங்கள் அவவுக்கு எதிராக வழக்குத் தொடரலாம்" என்றேன்.

"சத்திரசிகிச்சை மூலம் எலும்புகளைப் பொருத்து வோம். ஆனால், கால் மீண்டும் பழைய உணர்வு நிலைக்குத் திரும்பாதுவிட்டால் காலையே எடுத்துவிடத்தான் நேரும்" எனவும் சொன்னேன்.

"ஏதோ உங்களால் முடிந்ததைச் செய்யுங்கள்" என்று என் பொறுப்பில் அந்தப் பூனையை ஒப்படைத்துத் திருமதி சிமித் அகன்றாள்.

தீர்மானித்தவாறு சிகிச்சை மேற்கொண்டு எலும்புகளைப் பொருத்தியாயிற்று. ஆனால் காலில் உணர்ச்சி இல்லை என்பது இரண்டு வார காலத்திலே தெரிந்தது.

அது குண்டான பூனை. தனது பருமனான தேகத்தைச் சுமந்தவாறு பின்காலை இழுத்து இழுத்து நடந்ததைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. ஒரு மாதமாகியும் நிலைமை அப்படித்தான்.

சிமித் தம்பதியரிடம் பூனையின் நிலையைச் சொன்னேன். திருமதி சிமித் மீண்டும் பக்கத்து வீட்டுக்காரியை திட்டினாள்.

எனினும், "பூனையின் முதலாவது சத்திரசிகிச்சைக்கு அந்தப் பக்கத்துவீட்டுக்காரியே செலவு செய்திருப்பதனால் இனிமேல் அவள் கவனமாக இருப்பாள்" எனச் சொன்னேன்.

சிமித் தம்பதியின் அனுமதியுடன் பூனையின் குறிப்பிட்ட கால் மற்றுமொரு சத்திரசிகிச்சையின் மூலம் அகற்றப்பட்டது. நாலு கால் பிராணியின் ஒரு காலை அகற்றுவது என்பது கவலையான விடயம்.

எனினும் இந்தத் தொழிலில் அந்தக் கவலையை புறம் ஒதுக்க நேர்ந்தது. பூனை ஒரு காலை இழந்த நிலையில் மீண்டும் சிமித் வீட்டுக்குச் சென்றது. தற்பொழுது அந்தப் பூனை உற்சாகமாக ஓடி ஆடித் திரிகிறது என்றும், மூன்று கால்களினாலேயே வீட்டுக்கூரையில் ஏறி விளையாடுகிறது என்றும் அறிகிறேன்.

அதன் அங்கத்தில் குறை நேர்ந்தாலும் திருமதி சிமித்தின் கண்முன்னே அது வழமைபோன்று விளையாடுகின்றது, மூன்று கால்களின் துணையுடன்.



# 9

# இதயம் பேசுகிறது

ஐந்தறிவு பிராணிகளின் குரலோசையை ஆக்கிரமித்தவாறே அந்த மிருகவைத்தியசாலை தனது கடமையை அந்த காலைப்பொழுதில் ஆரம்பிக்கிறது.

அன்று செவ்வாய்க்கிழமை. படு பிஸியான நாள்.

'வார்ட்டு'களில் அனுமதிக்கப் பட்டிருந்த நாய்களையும் பூனை களையும் பரிசோதித்துவிட்டு வெளி நோயாளர் பிரிவு அறைக்கு வருகின்றேன்.

ஏற்கனவே அனுமதிக்கப்பட்டிருந்த சில பிராணிகளின் இரத்தம் சோதிக்க

வேண்டியிருந்தமையால், வெளி நோயாளர் பிரிவுக்கு வருவதற்குச் சற்று தாமதமாகிவிட்டது. ஒலிவாங்கி மூலம், முதலாவதாக சோதிக்க வேண்டிய நாயின் பெயரையும் அதன் சொந்தக் காரரையும் அழைத்தேன்.

சில கணங்களில் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க அழகான யுவதி கருப்புநிற Doberman இனத்து நாயுடன் அறைக்குள் பிரவேசித்தாள். தன்னை 'ஜெனி' என அறிமுகப்படுத்தினாள். அவுஸ்திரேலியாவுக்கே உரித்தான சுகநல விசாரிப்புடன் நாயைப் பற்றிக் கேட்டேன்.

அந்த செல்லப்பிராணி வாலை ஆட்டியவாறு என்னை விநோதமாகப் பார்த்து.

அந்தப் பார்வை 'உன்னிடம் வந்துவிட்டேன் என் வாழ்வை இனி நீதான் தீர்மானிக்கப் போகிறாய்' என்பது போல் இருந்தது.

"பெயர் என்ன?"

"ரைசன்", அவள் சொன்னாள்.

ரைசன் என்னருகே வந்து என் கையை முகர்ந்தது. அதன் தலையைத் தடவினேன்.

"என்ன சுகமில்லை?"

"டொக்டர், ரைசன் நன்றாகச் சாப்பிடுகிறான். ஆனால், மூன்று நாட்களாக இருமுகிறான். தொண்டையில் ஏதும் எலும்புத்துண்டு சிக்கியிருக்குமோ என்றும் கவலையாக இருக்கிறது."

ஜெனியின் ஊகம் சரியாக இருக்கலாம் என்ற எண்ணத்தில், "சமீபத்தில் எலும்பு ஏதும் சாப்பிடக் கொடுத்தீர்களா?" எனக் கேட்டேன்.

"இல்லை டொக்டர்?"

"அப்படியானால் Kennel Cough தான். ஏனைய நாய்களிடமிருந்தும் தொற்றுதவதற்கு வாய்ப்புண்டு." ரைசனின் தொண்டைப் பகுதியை வெளிப்புறமாக தடவிப் பார்த்தேன்.

"கிட்டத்தட்ட எமக்கு வரும் தடிமன் இருமல் போன்றுதான். பயப்படத்தேவையில்லை" என்று சொல்லி விட்டு அதன் வயிற்றைத் தடவிப் பார்த்தேன். சற்று வீங்கிப் பெருத்திருந்தது.

"இது சாப்பாடாக இருக்கலாம்" - இது என் ஊகம்.

ஸ்டெத்தஸ்கோப்பை அதன் நெஞ்சில் வைத்து நாடித் துடிப்பை பரிசோதித்தேன்.

வழக்கத்துக்கு மாறாக வேகமாகத் துடிப்பதை, ஸ்டெத்தஸ்கோப் உணர்த்தியது.

"ஜெனி என்னை மன்னிக்கவேண்டும். ரைசனின் இதயம் வீங்கியிருக்கிறது. அதனால் அது அவஸ்தைப்படுகிறது. இருமலுக்கும் அதுதான் காரணம்."

இதனைக் கேட்ட ஜெனியின் முகம் வாடிவிட்டது.

"கவலைப்படாதீர்கள். எதற்கும் x-ray எடுத்துப் பார்ப்போம்," என்றேன்.

"டொக்டர் உண்மையிலேயே அதன் இதயம் வீங்கியிருக்கிறதா?" ஜெனி கண்கள் பனிக்கக் கேட்டாள்.

"அப்படி இருக்கக் கூடாது என்றுதான் விரும்புகிறேன். இருந்தாலும் x-ray தான் எதனையும் தீர்மானிக்கும்."

ஜெனி கலங்கியவாறு ரைசனைத் தடவினாள். அது குனிந்து அவள் பாதங்களை முகர்ந்தது. வாலை ஆட்டியது. நர்ஸ்ஸை அழைத்தேன். ஜெனியை அமரச் சொல்லிவிட்டு நர்ஸின் துணையுடன் ரைசனை x-ray அறைக்கு அழைத்தேன்.

ரைசனை அங்கு அழைப்பது பெரும்பாடாகி விட்டது. அது தனது எஜமானியை விட்டுப் பிரிந்து வர மனமில்லாமல் அவளையே ஏக்கத்துடன் பார்த்தது. அவளும் அதனைத் தடவி என்னுடன் அனுப்பினாள்.

x-ray எடுத்துப் பார்த்தும் எனக்கு ஒருபுறம் மகிழ்ச்சி, மறுபுறம் கவலை.

எனது மருத்துவ அனுபவத்தின் பிரகாரம் இதயம்

பருத்துள்ளதை x-ray எடுக்க முன்பே அனுமானித்துக் கொண்டதனால், என் அனுமானம் x-ray மூலம் சரியாகிப் போனதால் எழுந்த மகிழ்ச்சி.

ஆனால், அந்த வாய்பேசாத ஜீவன் மரணப் போராட்டத்தில் சிக்கியுள்ளதே என்பதை x-ray படம் பிடித்துக் காட்டியதனால் எழுந்த கவலை.

ரைசனின் நெஞ்சறையில் முக்கால்வாசிப் பகுதியை இதயம் பெருத்து ஆக்கிரமித்திருந்தது.

அதனை பார்த்து ஜெனி அதிர்ச்சியடைந்தாள். கண்களில் நீர் முட்டிக் கொண்டது.

"ஜெனி மன்னிக்கவேண்டும். ரைசனின் இதயம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. இச்சந்தர்ப்பத்தில் மருந்துகள் எதுவும் பலனளிக்கப் போவதில்லை." என்றேன்.

"டொக்டர் எனது ரைசனின் இதயம் விசாலமாக பெருத்துவிட்டதை உங்களது x-ray காட்டுகிறது. ஆனால் அதன் இதயம் உண்மையிலேயே மிகவும் விசாலமானதுதான் என்பதை அது தனது செயல்களின் மூலம் பலதடவை எனக்குக் காண்பித்துவிட்டது" என ஜெனி சொல்லும்போது கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் விழி மடலிலிருந்து உதிரத்தொடங்கின.

அவளை ஆச்சரியத்துடன் பார்த்தேன். 'ரிசு' பொக்ஸிலிருந்து 'ரிசு' எடுத்துக் கொடுத்தேன்.

"நன்றி."

அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது. ரைசனைப் பற்றிய கதையொன்றை அவள் எனக்குச் சொன்னாள்.

மூன்று வருடங்களுக்கு முன்பு, ஒரு பனிக்காலம்.

மெல்பன் நகரில் ஒரு பெரிய இலாகாவின் களஞ்சிய அறையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் வேலை ஜெனிக்கு.

மாலை ஆறு மணிக்கெல்லாம் பொழுது இருண்டுவிடும். வேலை முடிந்து ரயிலேறி கிளேற்றனுக்குத் திரும்புகிறாள்.

வா-3

இரவு எட்டு மணியாகிவிட்டது. ரயில் நிலையத்திலிருந்து நடை தூரம்தான் அவளது வீடு. தெருவில் ஜனநடமாட்டம் இல்லை. மயான அமைதி. கூப்பிடு தொலைவில் வீடு.

திடீரென ஒரு உருவம் அவள்மீது பாய்ந்து அவளை இருளடைந்த பக்கமாக இழுத்தது. ஜெனி அதிர்ந்தாள். அவன் சுமார் முப்பது வயது மதிக்கத்தக்கவன். அவளைக் கட்டிப்பிடித்து மூர்க்கத்தனமாக நடந்து கொண்டான். எதுவுமே செய்ய முடியவில்லை. தரையில் விழுந்தாள். அந்தக் கயவன் அவள் மீது பாய்ந்தான்.

ஜெனி கூக்குரலிட்டாள்...

"ரைசன்... ரைசன்..."

ஜெனியின் அவலக்குரலைக் கேட்டு அபயம் அளிக்க ஓடிவந்தது ரைசன். ஜெனியைப் பலாத்காரம் செய்ய முனைந்த அந்தப் பாதகனைக் கவ்வி இழுத்தது.

ஜெனி தப்பினாள். ரைசன் தனது எஜமான விசுவாசத்தை அந்தக் கயவன்மீது காட்டத் தொடங்கியது. அவன் ரைசனிடம் 'கடி' வாங்கிக் கொண்டு ஓட்டம் பிடித்தான்.

அன்று ஜெனியின் மானம் காத்த ஜீவன், இன்று அவளைவிட்டுப் பிரியப் போகிறது.

அந்தச் சம்பவம் முதல், ரைசன் ஒரு மெய்ப்பாது காவலன் போன்று ஜெனியை வலம் வந்து கொண்டிருக்கிறது.

இந்தக் கதையைக் கேட்டு, என் மனமும் உருகியது. எனினும் மனதைக் கல்லாக்கிக் கொண்டு... "ஜெனி மன்னிக்க வேண்டும். உங்களுக்கு ஒரு பாதுகாப்புத் துணையாக இதுநாள் வரையில் வாழ்ந்த ரைசனை நீங்கள் நிரந்தரமாக பிரியவேண்டிய வேளை வந்துவிட்டது" என்றேன்.

"என்ன சொல்கிறீர்கள் டாக்டர்?"

"'கருணைக் கொலை' என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?"

ஜெனி விம்மினாள்.

"உங்கள்மீது பாசம் பொழிந்த ஜீவன் நோய் உபாதையில் அவஸ்தைப்படுவதை பார்த்துக் கொண்டிருக்கப் போகிறீர்களா? அதற்கு Euthunasia கொடுப்பதன் மூலம் நிரந்தரத் துயிலில் விட்டு அதன் ஆத்மா சாந்தியடையச் செய்யலாம்."


"டொக்டர்!" ஜெனியால் அதற்கு மேல் பேச முடியவில்லை. அவள் தொண்டை அடைத்துக் கொண்டது. கண்ணீர் உகுத்தவாறே, அந்தக் கருணைக் கொலைக்கு ஒப்புதல் அளித்து படிவத்தில் ஒப்பமிட்டாள் ஜெனி.

ஜெனி ரைசனை அணைத்தவாறு விறைத்தபடி நின்றாள். அது அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தது.

நான் ஊசி மூலம் அந்த உயிர் பறிக்கும் பச்சைநிறத் திரவத்தை ரைசனின் முன்னங்காலில் ஏற்றினேன். ரைசனின் விழி அகன்ற பார்வை ஜெனியின்மீது நிலை குத்தியிருக்க, எது வித துடிப்புமின்றி அடங்கியது.

எனினும், அந்த வாய்பேசமுடியாத ஜீவனின் இதயம் பேசிக்கொண்டேயிருக்கும்.

❏



# 10

## கமால்

## குதிரை

## இளம்கொடி

அவுஸ்திரேலியாவில், மிருக வைத்திய தொழிலை ஆரம்பித்த காலத்தில் நிரந்தரமான தொழில் கிடைக்காத காரணத்தினால், சிறிது காலம் locum ஆக வேலை செய்தேன். மற்றத் துறைகளில் casual labour எனக் கூறுவார்கள். மருத்துவ, மிருக வைத்திய துறைகளில் நாகரீகமாக locum எனக் கூறப்படும். இந்தக் காலகட்டத்திலே பல இடங்களில் locumஆக வேலை செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தது. சில சமயம் வேலைக்காகப் பல மணி நேரங்கள் பயணம் செய்யவும் வேண்டியிருந்தது.

*1990-ஆம் ஆண்டில்* Border Town என்ற இடத்துக்கு வேலை செய்ய அழைக்கப்பட்டேன். விக்ரோறிய — தென் அவுஸ்திரேலிய மாநிலங்களின் எல்லையை அண்டிய ஒரு சிறு நகரம் Border Town ஆகும். முன்பு தெரியாத இடமாக இருந்ததால், முதல் நாளே வேலை நிலையத்துக்குச் சென்று விட்டேன்.

வைத்தியசாலையின் பின் பகுதி எனது தங்குமிடமாகத் தரப்பட்டது. கட்டில் எனக்குத் தரப்பட்டிருந்தாலும், பகலில் அக்கட்டிலை வீட்டுச் சொந்தக்காரியின் பூனை ஆக்கிரமிக்கத் தவறுவதில்லை. முதல் நாள் அவ்வளவு வேலை இருக்கவில்லை. இரண்டாம் நாள், பல நாய்களும் பூனைகளும் சிகிச்சைக்காகக் கொண்டு வரப்பட்டன.

அத்துடன் Kockatoo என்ற பறவையும் கொண்டு வரப்பட்டது. அப்பறவை பல கெட்ட வார்த்தைகளைக் கூறியது. அதன் சிறகுகளையும், அலகுகளையும் மிகவும் சந்தோஷமாகக் கத்தரித்தேன்.

இரவு வந்ததும், அருகிலுள்ள pubக்குச் சென்று, உணவை அருந்திவிட்டு, எனது அறைக்கு வந்து அங்கு படுத்திருந்த பூனையைத் துரத்திவிட்டு, கட்டிலில் ஓர் புத்தகத்துடன் சாய்ந்தேன். சுமார் பத்து மணியளவில் தொலைபேசியின் கிரீங் கிரீங் சத்தம் கேட்டு திடுக்கிட்டு எழுந்தேன். இந்த அகால நேரத்தில் எனக்கு யார் தொலைபேசியில் அழைப்புத் தரப்போகிறார்கள் என யோசித்தேன்.

தொலைபேசியை எடுத்தபோது ஓர் நடுத்தர வயது பெண்ணின் குரல் கேட்டது. வழமைபோல் எனது மிருகவைத்திய நிலையத்தின் பெயரைக் கூறி, "What can I do for you?" என கேட்டேன். "மிருக வைத்தியருடன் அவசரமாகக் கதைக்க வேண்டும்" என அப்பெண் கூறினார்.

"மிருக வைத்தியர் விடுமுறையில் சென்று விட்டார். நான் அவருக்காக locum கடமை புரிகிறேன்" என ஆங்கிலத்தில் பதில் கொடுத்தேன்.

"எனது குதிரை குட்டி போட்டுச் சில மணிநேரம் சென்றுவிட்டது. தாயும், குட்டியும் சுகமாக உள்ளன. ஆயினும் இளம் கொடி வரவில்லை. உடனே எனது பண்ணைக்கு வரமுடியுமா?" என வினவினார். விலாசத்தை ஒரு notebook-ல் எழுதிவிட்டு. வரைபடத்தைப் பார்த்தேன். மெல்பேர்ன், சிட்னி நகரங்களையும் அதன் சுற்றுப்புறத்து இடங்களின் வரைபடங்களைப் போலல்லாது, Border Town ன் வரைபடத்தில் ஒவ்வொரு பண்ணையும் இலக்கங்களால் குறிக்கப்பட்டிருந்தன. முக்கிய திருப்பங்களை notebook-ல் குறித்து, காரில் ஒரு மணித்தியால ஓட்டத்தின் பின் அப்பண்ணையைச் சென்றடைந்தேன்.

கதவைத் தட்டியபோது ஆன் (Ann) என்று தன்னை ஓர் பெண் அறிமுகம் செய்து என்னை வரவேற்றார். "இடத்தைக் கண்டு பிடிப்பதற்காக நேரம் எடுத்ததா?" எனக் குசலம் விசாரித்தார்.

"புது இடமாக இருந்தபடியால், மெதுவாகக் காரை ஓட்டி வந்தேன்" எனக் கூறினேன்.

குதிரை இருக்கும் லாயத்துக்குச் சென்றோம். ஐந்தரை அடி உயரமுள்ள சிவப்பு நிறக் குதிரை. சகல லட்சணமும் கொண்டு கம்பீரமாக நின்றது. குட்டி பிறந்து நாலு மணிநேரம் கூடச் செல்லவில்லை. துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. குதிரையின் சனனவாயிலிருந்து இளம்கொடி தொங்கிக் கொண்டிருந்தது.

குதிரையின் முன்காலைத் தூக்கும்படி ஆனிடம் கூறினேன். முன் காலைத் தூக்கி வைத்திருந்தால், பின் கால்களால் எனக்கு உதைக்க முடியாது. முன்னம் காலைத் தூக்குவது மன்னாரில் முத்துக் குளிப்பவர்கள், மண்டைக்

கயிறை மச்சானிடம் கொடுப்பது போன்ற செயலைப் போன்றதாகும்.

ஆன், குதிரையின் முன் காலை நிலத்தில் இருக்கவிட்டால், எனது உடலின் சில பகுதிகளை நிலத்திலிருந்து எடுக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம். கை உறையைப் போட்டு, இளம் கொடியை எடுக்க முயற்சி செய்தேன். முடியவில்லை. ஊசி மருந்தைச் செலுத்திவிட்டு, "பதினைந்து நிமிடத்தின் பின் இளம் கொடி தானாகவே விழும்" என ஆனிடம் கூறினேன்.

வீட்டுக்கு என்னை அழைத்து, குவளையில் வைன் (wine) தந்தார். எந்த நாட்டைச் சேர்ந்தவன் என வினவினார்.

"இலங்கை" எனக் கூறினேன்.

"உங்கள் கமால் எனது பெரும் அபிமானத்துக்குரியவர்" எனக் கூறினார்.

நடிகர் கமலஹாசனின் புகழ் அவுஸ்திரேலிய நாட்டின் ஓர் சிறு நகரத்துக்கும் பரந்துவிட்டதா என யோசித்தேன்.

அப்பெண், கமாலின் பாட்டுக் கசெட்டுகளை மேசையில் வைத்துவிட்டு ஒன்றைத் தனது cassette player-ல் போட்டு, player-ஐ இயக்கிவிட்டார்.

அப்போதுதான் எனக்கு ஆன் கூறியது நடிகர் கமலஹாசன் அல்ல, பாடகர் கந்தையா கமலேஸ்வரனை என்பது எனக்குப் புரிந்தது. இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்டு, பின் மலேசியாவில் வளர்ந்து, தற்போது அவுஸ்திரேலியாவை வசிக்கும் நாடாக்கியுள்ள பிரபல பாடகராகிய கமால், ஆனின் அபிமான பாடகராவர் என உணர்ந்தேன். எனக்கும் ஆங்கிலப் பாடல்களுக்கும் அதிக தூரம் இருந்தாலும், கமாலின் பாடல்களை ரசிக்கும் ஆன் என்ற ரசிகையின் ரசனையை ரசித்தேன்.

நான் கூறியதுபோல் பதினைந்து நிமிடத்தின் பின்

இளம்கொடி விழுந்துவிட்டது.

எங்கள் ஊர் என்றால் ஆல மரத்தைத் தேடுவார்கள். இங்கோ அச்சிரமங்கள் இல்லை என யோசித்தபடி காரில் ஏறி எனது இருப்பிடத்துக்கு வந்தேன்.







# 11

# கண்ணீர் அஞ்சலி

## கதை சொல்லும்

*பிலிப்பைன்ஸ் முன்னாள் அதிபர் மார்கோஸ் பிரபலமானவர். அவர் மட்டுமல்ல, அவரது பூதவுடலான சடலமும் பிரபலமானதுதான்.*

*காரணம் அவர் ஹவாயில் இறந்தார். ஆனால் அவரது நடவடிக்கை களினால் அதிருப்தியுற்ற பிலிப்பைன்ஸ் மக்கள் அச்சடலத்தை வரவேற்கத் தயாராக இருக்கவில்லை. பல சிரமங்களுக்கு மத்தியில் பிலிப்பைன் ஸிற்குள் பிரவேசித்த மார்கோஸின் சடலம் ஊர், கிராமம், நகரம் என்று சுற்றி வந்து சில வருடங்களின் பின்பே இறுதிக்கிரியைகளுக்கு முகம் கொடுத்தது.*

இங்கு கூறப்போகும் கதையின் நாயகன் கில்பேட் என்ற அவுஸ்திரேலிய Terrior இனத்தைச் சேர்ந்த நாயின் சடலத்திற்கும், மாகோஸின் சடலத்திற்கு நேர்ந்த கதி நேராது போனாலும், குளிர்சாதனப் பெட்டியிலிருந்து பலதடவை வெளியே எடுத்துக் காண்பிக்க வேண்டிய கதிக்காளாகியது.

இந்த ஏழு வயது நாய்க்கு Paul என்ற எஜமான். Paul காலையில் ஐந்து மணிக்கு வேலைக்குச் சென்று மாலை நாலு மணிக்குத் திரும்புவார்.

காலையில் அவர் புறப்படும் முன்னரே எழுந்து அவரைத் துயில் எழுப்பி அனுப்பும் கில்பேட், மாலையில் அவரது வரவுக்காக வாசலிலே காத்திருக்கும் விசுவாசம் மிக்க நாய்.

ஆனால் அதே வீட்டில் Paul மனைவியும், மகனும் வளர்க்கும் ஏனைய இரண்டு நாய்களும் கில்பேட் போன்று சுறுசுறுப்பானவை அல்ல.

இது இப்படி இருக்க, ஒருநாள் எனது கிளினிக் அருகில் வாகனம் ஒன்றால் மோதுண்டு குற்றுயிராகக் கிடந்த கில்பேட்டை ஒரு மனிதாபிமானம், அல்ல, மிருகாபிமானம் உள்ள பெண் எடுத்துவந்து காப்பாற்றுமாறு கேட்டாள்.

நான், நாயைப் பார்க்கும் போது அதன் உயிர் அதனை விட்டுப் பிரிந்திருந்தது.

நாயை உரியவர் வந்து கேட்கும் வரையில், அதனைக் குளிர்சாதனப் பெட்டியில் வைத்தேன். மறுநாள், கவுன்ஸிலுக்கு அறிவித்து அதன் 'இறுதிக் கிரியை'க்கு ஏற்பாடு செய்யவிருந்தேன்.

அன்று மாலை ஆறு மணியளவில் Mr. Paul வந்து நாயை விசாரித்தார். குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்து காண்பித்தேன். சில நிமிடங்கள் கண்ணீர்விட்டு அழுதுவிட்டு தாம் வேலையால் வரத்தமாதமாகியமையால் தன்னைத்தேடி

freewayக்கு ஓடியிருக்க வேண்டும் என்றும், யாரோ பாவி அடித்துவிட்டுப் போய்விட்டான் என்றும், விசுவாசம் மிக்க நாய் என்றும், சில சம்பவங்களை நினைவுபடுத்திக் கூறிவிட்டுச் சென்றார்.

அதன் பின்பு, Paul இன் மனைவி நாயைப் பார்க்க வந்தாள். அவளுக்கும் அதனைக் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்துக் காண்பிக்க நேர்ந்தது.

"நாயைத் தகனம் செய்து அதன் அஸ்தியை தரவேண்டும்" என்ற கோரிக்கையையும் விடுத்துச் சென்றாள் Paul இன் மனைவி.


பின்பு இரவு ஏழரை மணியளவில் Paul இன் மகன் வந்தான். அவனும் நாயைப் பார்க்க வேண்டும் என்றான். உயிரற்ற உடலுக்குத்தான் எத்தனை மவுசு. அவனுக்கும் அதனைக் குளிர்சாதனப் பெட்டியிலிருந்து எடுத்துக் காண்பித்தேன்.

"இன்னும் யாரும் வர இருக்கிறார்களா?" என்ற கேள்வியையும் கேட்டு வைத்தேன். அவன் சங்கடத்துடன் மன்னிப்புக் கேட்டான். நாய்க்காக கண்ணீர்விட்டான்.

எனக்கு ஒரு உண்மை புரிந்தது. ஒரே வீட்டில் தாய் - தகப்பன் வாழ்ந்தாலும் அவர்களுக்குள் சுமுகமான உறவு இல்லை. அதனால் தனித்தனியாக வந்து தமது வீட்டு நாய்க்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

மார்க்கோஸின் கதை மட்டுமல்ல; விக்கிரமாதித்தன் கதையும் எனக்கு ஞாபகம் வந்தது. சலிப்புடன் அந்த நாயை மீண்டும் குளிர் சாதனப்பெட்டியில் வைத்தேன்.

❐



# 12

## திரும்பிய காசோலை

**ம**திய நேரம். சிறிது நேரம் ஓய்வாக இருந்தபோது, முப்பது வயது மதிக்கத்தக்க மனிதன் எனது மிருக சிகிச்சை நிலையத்தினுள் பரபரப்பாக வந்து தனது நாயின் வாலில் கட்டி இருப்பதாக, அக்கட்டியைக் காட்டினான். வழமை போல் அவனின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்ற விபரங்களைப் பதிவுசெய்துவிட்டு, அக்கட்டியைப் பரிசோதித்தேன்.

பின் அவனிடம் அக்கட்டி தெள்ளுக்கடியினால் ஏற்பட்டதெனவும், அதற்கும் புற்றுநோய்க்கும் ஒருவித தொடர்புமில்லை என விளங்கப்படுத்தி

னேன். எதற்கும் புதிதாகப் பாவனைக்கு வந்துள்ள தெள்ளுக்கடி மருந்தை ஒரு மாதம் உபயோகித்தால் அக் கட்டி குணமாகிவிடும் எனக் கூறினேன்.

அப்போது அவன், நாய்க்கு மூட்டு வாதம் (Arthritis) இருப்பதாகவும், காலையில் நடப்பதற்கு சிரமப்படுவதாகவும் கூறினான். இடுப்பு மூட்டுக்களை சோதனை செய்துவிட்டு, x-ray எடுக்காமல் என்னால் உறுதியாக ஒன்றும் சொல்ல முடியாதெனவும், x-ray எடுப்பதற்கு மயக்க மருந்து கொடுக்க வேண்டும் எனவும் பதிலளித்தேன்.

அடுத்த கிழமை, ஒரு காலையில் உணவு கொடுக்காமல் எனது நிலையத்துக்கு நாயைக் கொண்டு வந்தால் x-ray எடுத்து, எதையும் உறுதியாகக் கூறமுடியும் என அவனுக்குக் கூறினேன்.

பின்னர் அவன் தனது வாழ்க்கைப் பிரச்சினையை எனக்குக் கூறினான். தான் மூன்று நாள்களாக நித்திரை கொள்ளவில்லை எனக் கூறினான். ஏன் என வினவியபோது, வேலையின் பின் வீட்டுக்கு வந்து தனது இரு குழந்தைகளைப் பராமரிப்பதில் தனது நேரம் போவதாகப் பதிலளித்தான். மூத்த பிள்ளையின் வயது ஒன்றரை வயது என்றும், இளம் பிள்ளையோ பிறந்து ஆறுமாதம் எனக் கூறினான். அப்பிள்ளைகளின் வயது காரணமாகத் தான் சிரமப்படுவதாக எனக்கு விளங்கப்படுத்தினான்.

அவனின் துன்ப வாழ்க்கை விபரங்களை மேலும் கேட்க விரும்பாமல் எனது தலையை மறுபக்கம் திருப்பினேன். நாய், பூனைகளின் நோய்களைக் கேட்டறிவது மட்டுமல்லாமல், அவற்றின் சொந்தக்காரர்களின் துன்ப விபரங்களைக் கேட்டு சஞ்சலப்படுவதை நான் விரும்புவதில்லை. ஆனால் பல சந்தர்ப்பங்களில் அப்படியான விபரங்களைக் கேட்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நான் தள்ளப்பட்டுள்ளேன்.

ஆனால் அவனோ விடுவதாக இல்லை. தன் இளம் மனைவி புற்றுநோயால் பீடிக்கப்பட்டு Monash வைத்திய

சாலையில் இருப்பதாகக் கூறினான்.

"Sorry" எனக் கூறிவிட்டு, இருவரும் பரிசோதனை அறையிலிருந்து வெளியே வந்தோம்.

பின் மருந்துக்கான Clinic பணத்தை காசோலை மூலம் செலுத்திவிட்டுச் சென்றான். இருகிழமைகளின் பின், அக்காசோலை வங்கிக்கணக்கில் காசில்லை என்ற குறிப்புடன் திரும்பி வந்தது. இது தொடர்பாக, அவனிடம் தொலைபேசியில் விசாரிக்குமாறு எனது உதவியாளரிடம் கூறிவிட்டு மதிய உணவுக்குச் சென்றேன்.

பின்பு எனது Clinicக்கு வந்தபோது எனது உதவியாளர் கொடுத்த செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது. அதாவது அம்மனிதனின் மனைவி, தன் கணவன் மாரடைப்பால் சில நாட்களின் முன் இறந்ததாகக் கூறினார். அவன் இறந்தபடியால் சட்டத்தின் பிரகாரம் அவன் வங்கிக்கணக்கு மூடப்பட்டது. அதன் காரணமாக அவன் எனக்குக் கொடுத்த காசோலை எனக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. எனது உதவியாளரும் தனது ஆழ்ந்த அனுதாபங்களை அவனின் மனைவிக்குக் கூறிவிட்டு தொலைபேசியை வைத்துள்ளார்.

இக்கதையைக் கேட்டபோது, எழுத்தாளர் செக்கோவின் சிறுகதை ஒன்று எனது ஞாபகத்துக்கு வந்தது. அதில் வரும் கதாநாயகன் ஒன்றுக்கு மேல் ஒன்றாக பல துன்பங்களை சந்திக்கின்றான். ஆயினும் அக்கதையை முழுமையாக வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இம்மனிதனின் கதையும் செக்கோவின் கதையைப் போன்றது.

ஓர் இறந்த மனிதரிடமிருந்து கடன் வசூலிக்க வேண்டிய சந்தர்ப்பம் மீண்டும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென நினைத்தேன்.

❐

# 13

## போதை தந்த கொக்கீஸ்



மனிதர்கள் போதை வஸ்துக்கு அடிமையாகி மயங்கும் கதை அறிவோம். ஆனால், ஐந்தறிவு படைத்த மிருகம் இந்தப் போதையினால் மயங்கும் கதை கேள்விப்பட்டதுண்டா?

நான் பணிபுரிந்த மிருகமருத்துவ மனை வழக்கமாக இரவு பன்னிரண்டு மணியுடன் ஓய்வு எடுத்துக் கொள்ளும்.

நானும் என்னுடன் பணிபுரிந்த வர்களும் வீட்டுக்குப் புறப்பட தயாராகிக் கொண்டிருந்த நள்ளிரவு வேளை.

வெளியே அழைப்புமணி ஓசை கேட்கிறது.

நர்ஸ் சென்று திறந்தாள்.

ஒரு இளைஞன் நாயொன்றுடன் வந்தான். "டொக்டர் நாயின் உடல்நிலை கவலை தருகிறது. தொடர்ந்து நித்திரை கொள்ளுமாற் போன்று ஒரு வகை மயக்கம்."

நான் நாயை பரிசோதனை அறைக்கு கொண்டு சென்றேன். பரிசோதனையை தொடங்கினேன். இதயத்துடிப்பு பலமாகவும் அதே சமயம் குறைவாகவும் கேட்டது.

கண்களை டோர்ச் வெளிச்சத்தில் பார்த்த பொழுது கண்மணி சிறுத்தும், ஆனால் வெளிச்சத்தில் தெளிவாகவும் இருந்தது.

பரிசோதனை மேசையிலிருந்தும் அது நித்திரை கொள்ளுமாற் போன்று தூங்கி வழிந்தது. சிறுவயதில், ஊரில் சிவராத்திரி நாளில் விடிய விடிய தியேட்டரில் படம் பார்த்து விட்டு மறுநாள் ஆங்கில வகுப்பில் தூங்கி வழிந்ததை இந்த நாய் நினைப்பூட்டியது.

நாய்ய கொண்டு வந்த இளைஞனிடம் சில கேள்விகளைக் கேட்டேன்.

"உமது வீட்டில் யாராவது நித்திரை மாத்திரை பாவிக்கிறார்களா?"

"இல்லை டொக்டர், அது அப்படி ஒன்றும் இல்லை."

"அப்படியாயின்.... யாராவது எதிரிகள் உமக்கு இருக்கிறார்களா?"

"இல்லையே டொக்டர்... ஏன் அப்படி கேட்கிறீர்கள்?" அவன் பதட்டத்துடன் கேட்டான்.

"எவரும் நாய்க்கு உணவில் நஞ்சு கலந்து விட்டார்களோ எனவும் சந்தேகப்படத் தோன்றுகிறது. ஆனால் நிச்சயமாக இல்லை. இந்த் நிலையில் எதுவும் சொல்வதற்கில்லை. எமது மருத்துவமனை மூடும் நேரமாகிவிட்டது. நாய்க்குத் தொடர்ச்சியான கண்காணிப்பும் சிகிச்சையும் தேவைப்படுகிறது. அதற்கு உடனடியாக நாயை மெல்பன் பல்கலைக்கழக மிருக மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதுதான் நல்லது" என்றேன்.

"வேறு வழி இல்லையா?" எனப் பரிதாபமாகக் கேட்டான்.

"சேலைன் ஏற்ற வேண்டும். தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். அதற்கு முதலில் உமது வீட்டைப் போய் சோதனை செய்து பாரும். ஏதோ வித்தியாசமான பதார்த்தத்தை உமது நாய் உட்கொண்டிருக்கிறது" என்றேன்.

அந்த இளைஞன் சற்று யோசித்துவிட்டு, "சரி டொக்டர் பல்கலைக்கழக மிருகமருத்துவமனைக்கே போகிறேன்" என நாயையும் கொண்டு கிளம்பிவிட்டான்.

எனது மனதில் இனம்புரியாத சந்தேகம் எழுந்தது.

"எதற்கும் உமது தொலைபேசி இலக்கத்தை நர்ஸிடம் கொடுத்துச் செல்லும். வீட்டை சோதித்துவிட்டு எம்மோடு தொடர்பு கொள்ளவும்."

அரைமணிநேரமாகியும் அவனிடமிருந்து தகவல் இல்லை.

பொறுமையிழந்து நர்ஸிடம் அவனுக்குக் கோல் எடுத்து விசாரிக்கும்படி சொன்னேன். பதினைந்து நிமிடத்தில் நர்ஸ் சுவாரஸ்யமான கதையுடன் வந்தாள்.

"டொக்டர் அவனுடைய வீட்டில் இரண்டு நாள்களுக்கு முன்பு அவனுடைய நண்பன் ஒருவனுக்காக Buck Nite நடந்துள்ளது. (Buck Nite என்றால் திருமணத்திற்கு முன்பு நண்பர்களால் மணமகனுக்கு நடத்தப்படும் விருந்து) மதுபோதை போதாமல், கஞ்சாவை பயன்படுத்தி சிகரட் புகைத்துள்ளார்கள். சிகரட் பழக்கமற்றவர்கள் மாவுக்குள் கஞ்சாவை வைத்து பேக் செய்து (கஞ்சா கொக்கீஸ்) சாப்பிட்டிருக்கிறார்கள். கீழே விழுந்த கஞ்சா பிஸ்கட் துகள்களை அந்த நாய் சாப்பிட்டிருக்கிறது. இதுதான் நடந்துள்ள சம்பவம். அவன் அதனை இங்கு மறைத்துவிட்டு இப்போது உண்மையை தொலைபேசியில் ஒப்புக் கொள்கிறான்.

அவள் விடைபெற்றாள். இந்த இளைஞனின் பெயர் ரொபர்ட்; நாயின் பெயர் ரெக்ஸ். "ஓ- ரொபர்ட்... ரெக்ஸ்... மர்ஜூவானா கொக்கீஸ்..." என்று சிரித்துக் கொண்டே எனது காரை நோக்கிச் சென்றேன்.

❐





# 14

## Lawn Mower ஆக்கப்பட்ட செம்மறியாடு

மெல்பன் குளிரில் நடுங்கியவாறு, அந்த நீதிமன்றத்தின் முன்னால், இப்ரஹிம் என்ற எகிப்தியனை மனதிற்குள் திட்டியவாறு நின்றேன்.

குளிரும், மனச்சலிப்பும் எரிச்சலைத்தான் அன்று எனக்கு ஏற்படுத்தியது. நீதிமன்றத்தில் சாட்சியாக எனது பெயர் எப்போது அழைக்கப்படும் எனக் காத்து நின்று தவமியற்றினேன்.

இவ்விதம் சாட்சிக் கூண்டில் ஏறவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதை நினைத்துப் பார்க்கிறேன். பின்னணி ஒரு திரைப்படம் போன்று மனதில் விரிகின்றது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. பிஸியான நாள். வழக்கமாக நாய், பூனைகளுடன் சிகிச்சைக்காக உறவாடும் நான், அன்று ஒரு செம்மறி ஆட்டுக்குச் சிகிச்சை செய்ய நேர்ந்தது.

வெள்ளை நிறமான செம்மறி ஆட்டைச் சுமந்தபடி அந்த எகிப்தியன் மருத்துவமனைக்கு வந்திருந்தான். அவனது தாடியும், அவன் சுமந்த ஆடும் தேவாலய சுவரோவியங்களை நினைவுபடுத்தின.

"ஆட்டுக்கு என்ன பிரச்சினை?" எனக் கேட்டேன். அவன் அரைகுறை ஆங்கிலத்தில் பேசினான்.

செம்மறி ஆட்டின் குளம்புகளுக்கு மேல் நான்கு கால்களிலும் சுற்றிவர காயங்கள் சீழ் பிடித்திருந்தது. மேலும் அந்த காயங்களிலிருந்து வந்த மணம் மூக்கைத் துளைத்தது. பலநாட் காயம்.

"எப்படி காயம் நேர்ந்தது?" எனக் கேட்டேன்.

"ஆடு தப்பிச் செல்லாமல் இருக்க நான்கு கால்களையும் கயிற்றினால் கட்டினேன். அதனால் ஏற்பட்ட காயம்..." என்று தயங்கித் தயங்கிச் சொன்னான்.

'இப்படியும் ஒரு முட்டாளா?' மனதில் நினைத்தேன். சொல்லத் தயங்கினேன். காயங்களைச் சுத்தப்படுத்தி மருந்து கட்டினேன்.

இது நிகழ்ந்து இரண்டு வாரம் கடந்திருக்கும். R.S.P.C.A.இன்ஸ்பெக்டர் எமது மருத்துவமனைக்கு வந்தார்.

பல தோற்றங்களில் எடுக்கப்பட்ட செம்மறிஆடுகளின் வர்ணப் புகைப்படங்களைக் காண்பித்து, "இந்த ஆட்டைத் தெரிகிறதா?" எனக் கேட்டார்.

"எனக்கு நினைவில் இல்லை. ஆனால் சில நாட்களுக்கு முன்னர், நான்கு கால்களிலும் காயங்களுடன் வந்த ஒரு செம்மறி ஆட்டிற்குச் சிகிச்சை செய்துள்ளேன்" எனச் சொன்னேன்.

அத்துடன், சம்பவத்தையும் விபரித்தேன்.

"ஆட்டை கொண்டு வந்தவரை நினைவு படுத்த முடியுமா?" என்று இன்ஸ்பெக்டர் கேட்டார்.

"ஆமாம், யேசுநாதரின் தாடியுடன் அவனது உருவம் நினைவுக்கு வருகிறது. அவனது பெயர் இப்ரஹிம்" என்று சொல்லிவிட்டு, "என்ன விவகாரம்?" எனக்கேட்டேன்.

"அது சுவாரஸ்யமான கதை," என்ற இன்ஸ்பெக்டர் சொன்ன சுவாரஸ்யம் இதுதான்:

அந்த செம்மறி ஆடு, சலிம் என்பவனுக்குச் சொந்தமானது. அத்தோடு சலிமின் பின் வளவில் வளர்ந்த புல்லை மேய்ந்து வாழ்ந்தது. தனது முதுகுவலி காரணமாக தனது வளவில் வளர்ந்த புல்லை வெட்டி சுத்தப்படுத்த Lawn Mower பாவிக்காத இப்ரஹிம், சலீமிடம் அவனது செம்மறி ஆட்டை இரவல் வாங்கிச் சென்று தனது வளவில் புல்மேயச் செய்திருக்கிறான்.

ஆடு தப்பி ஓடாமல் இருப்பதற்காக அதன் நான்கு கால்களையும் கட்டியிருக்கிறான். இறுக்கமாக கட்டியமையால் ஏற்பட்ட காயங்கள்தான் அப்படி சீழ் பிடித்திருந்தது.

அவன் செம்மறி ஆட்டை இவ்விதமாகப் புல்லு வெட்டும் இயந்திரமாகப் பாவித்த காட்சியைக் கண்ட அயலார், R.S.P.C.A.இற்கு புகாரிட்டுள்ளனர். இதனையடுத்து இந்த இன்ஸ்பெக்டர் நடவடிக்கையில் இறங்கினார்.

Animal Cruality சட்டத்தின்கீழ் இப்ரஹீமுக்கு எதிராக வழக்கும் தொடரப்பட்டது. ஆடு அவனிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டு பண்ணைக்கு அனுப்பப்பட்டது.

அந்த நீதிமன்றத்தின் வாயிலில் கால் கடுக்க, என் தலைவிதியை. நொந்தபடி நின்றேன். இன்ஸ்பெக்டர் ஸ்மித் அருகே வந்தார். "டாக்டர் மன்னிக்க வேண்டும். உங்களது சாட்சியத்திற்கு அவசியம் இன்றி அவன், தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டான். அதனால் 800 டொலர்கள் அபராதமும் செலுத்திவிட்டான்".


"அந்த 800 டொலர்களுக்கு இப்ரஹீம் இரண்டு Lawn Mower இயந்திரங்கள் வாங்கியிருந்திருக்கலாம். முட்டாள்" என்று மனதிற்குள் திட்டினேன்.

ஆனால், இதிலிருந்து ஒரு உண்மையும் புலனாகிறது. எனது தாய்நாட்டை நினைத்தேன். மனிதனுக்கே பாதுகாப்பற்ற நாடாக மாறிக்கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே வாய் பேசாத மிருகத்திற்கும் பாதுகாப்பு உண்டு.

❐

15

# மாத்திரையில் மாற்றம்



நான் இரவு வேலை முடித்துக் கொண்டு எனது வைத்தியசாலையின் கதவுகளை மூட எத்தனிக்கும் போது, ரெலிபோன் மணி அடித்தது. மனதுக்குள் திட்டிக்கொண்டு டெலிபோனை எடுத்தேன். திருமதி அப்போஸ் அடுத்த முனையில் இருந்து, "ரோமி எனது மைக்கிரேன் மாத்திரையை விழுங்கி விட்டது. என்ன செய்யலாம் டாக்டர்?" என்று கேட்டாள்.

"எவ்வளவு நேரம் இருக்கும்?"

"பத்து நிமிடம்."

"உடனே கொண்டு வாருங்கள்" என்றேன்.

நான் காத்திருந்தேன். பதினைந்து நிமிடம் சென்ற பின் ரோமியுடன் திருமதி அப்போஸ் அழைப்புமணியை அழுத்தினாள்.

நான் என்ன மருந்து என கேட்டுவிட்டு, Poisoning centre என்னும் இடத்துக்கு டெலிபோன் செய்து, ஏதாவது மாற்று மருந்து இருக்கிறதா இதற்கு எனவும், மேலும் என்ன பாதிப்பை நாயில் உருவாக்கும் எனவும் வினவினேன். அங்கு உள்ளவர்களுக்கு நாயில் என்ன பாதிப்பு உருவாகும் எனத் தெரியவில்லை.

நான் டெலிபோனை வைத்துவிட்டு ரோபியைப் பார்த்தபோது, ரோபி ரபர் பந்து போல் துள்ளியது. திருமதி அபோசால் நாயைப் பிடித்துக் கொள்ள முடியவில்லை.

மருந்து மூளையைப் பாதித்திருக்கிறது என எனக்கு அனுமானிக்க முடிந்தது. நானும் திருமதி அபோசுமாகச் சேர்ந்து ரோபிக்கு மயக்க மருந்து கொடுத்தோம். அடுத்தநாள் ரோபி குணமாகி வீடு திரும்பியது.

இந்தச் சம்பவம் நடந்து சில நாட்களின் பின், எனது நர்ஸ் ரெலிபோனைத் தந்துவிட்டு, யாரோ டாக்டரிடம் பேச வேண்டுமாம் என்று சொன்னாள்.

நான் ஹலோ எனக் கூறியதுதான் தாமதம், ஒரு பெண் தான் வழக்கமாக Morning after pill எடுப்பதாகவும், இன்று தான் வாந்தி எடுப்பதாகவும் கூறினாள். நான் எதுவும் பேசத் தொடங்க முன், "திருப்பி ஒரு மாத்திரை எடுக்கட்டுமா?" எனக் கேட்டுவிட்டு தனது குடும்பக்கட்டுப்பாட்டு முறைகள் எல்லாவற்றையும் மட மட எனக் கூறினாள்.

ஐந்து நிமிடம் வரை எனக்கு பேசுவதற்கு இடைவெளி கிடைக்கவில்லை. கிடைத்தவுடன் சொன்னேன்: "நீங்கள் பிழையான டாக்டரிடம் பேசுகிறீர்கள்."

உடனே பலமுறை மன்னிப்புக் கேட்டாள். "மனிதர்களின் மாத்திரைகளை நாய்கள் சாப்பிட்டது போல் இதுவும் ஒரு சுவாரஸ்யமான சம்பவம்" எனச் சிரித்தேன்.

பின்னர் ஒரு மருத்துவ மாத இதழ் படித்தபோது அது இன்னும் பலமடங்கு சுவையாக இருந்தது.

ஒரு வயதான தம்பதிகள் வைத்தியரிடம் சென்று வைத்திய ஆலோசனை பெற்றார்கள். இதில் பெண்மணி HRT எனப்படும் Hormone Replacementt Therapy யில் இருப்பவர். அடிக்கடி வைத்தியரிடம் போக வேண்டி இருக்கும்.

பெண்மணியின் ஆலோசனையை முடித்து விட்டு டாக்டர் ஆணிடம், "எப்படி உங்கள் வாழ்க்கை" எனக் கேட்ட போது, ஆண் "எல்லாம் நல்லா இருக்கு. ஆனால் எனது மார்பகங்கள் பெரிதாகின்றன" எனக் கூறினார்.

டாக்டர் ஆச்சரியத்துடன், "அறுபது வயதில் இது புதுமை" எனக் கூறிவிட்டு ஆணின் உடலைப் பரிசோதித்தார். பரிசோதனையின்போது கூறியது உண்மை எனத் தெரிந்தது. மேலும் ஆணின் கீழ் ஆடையைக் களைந்து பரிசோதித்தார். அப்பொழுது ஆணின் இடுப்புப் பகுதியில் ஒரு patch புள்ளியாக இருப்பதைக் கண்டு பிடித்துவிட்டுச் சொன்னார்.

"உங்கள் மனைவியின் இடுப்பில் இருக்க வேண்டிய HRT (patch) உங்கள் இடுப்பில் ஒட்டப்பட்டுள்ளது. இதனால்தான் உங்கள் மார்பகங்கள் பெருத்தன."

ஆணின் முகத்தில் அசட்டுத்தனமான சிரிப்புத் தோன்றியது.

இந்த சம்பவத்திலிருந்து, மனிதனின் மருந்து மிருகங்களுக்கு கொடுக்கக் கூடாது என்பது மட்டுமல்ல, பெண்ணின் மருந்து ஆணுக்கும் நல்லதல்ல என்பதும் புரிகிறது.

❐



# 16

# இந்த மண்ணும் அந்த மண்ணும்

“டாக்டர்... எனது நாயை எனது காரினால் அடித்துவிட்டேன். மிகவும் கவலையாக இருக்கிறது. அதற்கு உட்காயம் ஏற்பட்டிருக்குமோ எனவும் யோசிக்கின்றேன். உதவ முடியுமா?” என்று ஒரு ஆங்கில மாது என்னுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டு கேட்டார்.

என் நர்ஸ்ஸை அனுப்பி அவளுக்கு உதவி, நாயைக் கிளினிக்கிற்குக் கொண்டவரச் செய்தேன். நாய்க்கு சுமார் பதினைந்து வயதிருக்கும். அதனைப் பரிசோதித்து விட்டு, “பின் கால்களில் உணர்வு இல்லை; முதுகெலும்பு தாக்கப் பட்டிருக்கலாம்; நாளை Xray எடுத்துப்பார்ப்போம்” என்றேன்.

நாயை அடித்துவிட்ட குற்ற உணர்வினால், எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை என்ற நிலைமைக்கு அந்தப் பெண் தள்ளப்பட்டிருந்தாள். நாயை மீண்டும் படுக்க வைத்துச் சோதித்தபோது, ஏற்கனவே அடி வாங்கிய கோபத்திலிருந்த அந்த நாய் என் கையைக் கடித்துவிட்டது.

அவள் பதறிப்போய் "மன்னித்துக் கொள்ளுங்கள்" என்றாள். இந்தத் தொழில்முறைக் கஷ்டம் (occupational haz-zad) எமக்குச் சாதாரணமானது.

அதே சமயம் இங்கு அவுஸ்திரேலியாவில் நாய் கடித்துவிட்டால் கடிபட்ட இடத்திற்கு மருந்தைப் போட்டுவிட்டு "Thats O.K." என்று அமைதியாகச் சொல்லிவிடலாம்.

ஆனால், இலங்கையில்... என் நினைவுகள் பின்னோக்கி ஓடுகின்றன. மதவாச்சியில் நான் பணிபுரிந்த காலத்தில் ஒரு ஊழியர் ஓடி வந்து "டொக்டர், பண்டாரவின் ஆட்டை நாய் கடித்துவிட்டது. வந்து பாருங்கள்" என்றான்.

மதவாச்சியிலிருந்து சுமார் ஆறு மைல் தொலைவில் பண்டார வசிக்கின்றான். சென்றேன். பண்டார ஏற்கனவே எனக்கு அறிமுகமானவன்.

"டொக்டர் எங்கள் வீட்டு நாய் — ஆட்டை மட்டுமல்ல — என் மகன் பொடிசிங்கோவையும் கடித்து விட்டது. எனக்கு வந்த ஆத்திரத்தில் நாயைச் சுட்டுக் கொன்றுவிட்டேன்."

ஆனால், இச்சம்பவம் நடந்து ஒரு வாரமாகி விட்டதையும் ,அறிந்தேன். நாயிடம் கடிபட்ட ஆடு எழும்ப முடியாமல் கிடந்தது. ஆடு தனது உடல் முழுவதையும் நக்கிக் கொண்டிருந்தது. பண்டார ஆடு நாயினால் கடிபட்ட கவலையில் இருந்தான். ஆனால், நாயினால் கடிபட்ட மகனை எதுவித கவலையும் இன்றி பாடசாலைக்கு அனுப்பியிருந்தான்.

தாமதமின்றி மகனை அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்க ஏற்பாடு செய்யும்படி சொன்னேன். தனது காயத்தைத் தன் நாவால் நக்கிச் சுகம் தேடி, ஆடு - பாவம்- அதற்கு Rabies வந்துவிட்டது. அதனைக் கருணைக் கொலை மூலம் மேல் உலகம் அனுப்பிவிட்டு, (நாயின் தலையை MRI க்கு (Medical Research Institute) அனுப்பினேன்) நாய் கடிபட்ட பண்டாரவின் மகனைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குச் சென்றேன்.

பண்டாரவின் மகன் பொடிசிங்கோ ஆஸ்பத்திரியில் தனிமைப் படுத்தப்பட்டு தனி அறையில் வைக்கப் பட்டிருந்தான். அது இருட்டறை. அவனைப் பரிசோதித்த டாக்டர் என் நண்பன்.

பொடிசிங்கோவின் உடலிலும் Rabies Virus பரவி விட்டதற்கான அறிகுறி தென்பட்டுவிட்டதாக அந்த டாக்டர் சொன்னார். Rabies வந்த ஆட்டையும் நாயையும் பார்த்த எனக்கு, அந்தக்கிருமி தாக்கிய ஒரு சிறுவனைப் பார்ப்பது அதுதான் முதல் அநுபவம். பரிதாபத்திற்குரிய அந்தப் பத்துவயதுச் சிறுவன் — ஒரு கப் தண்ணீரைப் பார்த்துவிட்டு அதிர்ச்சியுடன் எழுந்து நடுக்கத்துடன் கூச்சலிட்டான். அவன் குரல் மாறியிருந்தது. நாயின் ஊளைச் சத்தம் போன்று ஒலித்து.

இதைத்தான் Hydrophobia எனக் கூறுவர்.

காற்றும் வெளிச்சமும் பட்டால் இந்தப் பாதிப்புக் குள்ளான நோயாளி Violent Tremor ஆக மாறும் சாத்தியங்கள் அநேகம். எனக்கு அதற்குமேல் அங்கே நிற்க முடியவில்லை.

"டொக்டர் பொடிசிங்கோ இன்னும் எத்தனை நாட்கள் உயிருடன் இருப்பான்?" என்று என் சிற்றூழியன் கேட்டான்.

நான் உதடு பிதுக்கினேன். மரணத்துக்கு நாள் குறித்து வேதனையை அதிகரித்துக் கொள்ள விரும்பாமல்

மௌனமானேன்.

இப்படி எத்தனை பொடிசிங்கோக்கள் எங்கள் தாய்நாட்டில்...

இலங்கையின் வடபகுதியில் பல வருடங்களாக விசர் நாய்க்கடிக்குத் தடை மருந்தே கிடைப்பதில்லை என அறியும் பொழுதெல்லாம், ஏனோ தெரியாது பொடிசிங்கோ என் மனக்கண்ணிலே தோன்றுவான்.

❑



# 17 அகதி அந்தஸ்து கேட்ட பெருநண்டு



இக்கதையின் நாயகன் பெருநண்டு. ஆறறிவுள்ள மனிதன் வில்லன்.

நண்டு வர்க்கத்தில் பெரியது பெரு நண்டாகும். அதனது சுவை மறக்க முடியாதது. அதிலும் 'எழுவை தீவு' எனும் சிறிய தீவில் பிறந்து வளர்ந்த எனக்கு நண்டுகறி பிடித்த மானதாகும். ஆஸ்திரேலியாவுக்கு வந்தபின் நண்டுக் கறி சாப்பிடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இங்கு சீனக்கடைகளில் மட்டுமே நண்டு காணப்படும்.

எங்கள் ஊரில் மீன்வலையில் நண்டு சிக்கினால் மீனவர்களுக்குப்

பலத்த கோபம் ஏற்படும். நண்டு வலையில் சிக்கியவுடன் வலையைக் கடித்துச் சிதைத்து விடும். மீனவர்கள் நண்டின் மீது கொண்ட ஆத்திரத்தால் அதன் இருகால்களையும் முறித்து விடுவார்கள். கால்கள் இழந்த நண்டுகள் கரையை அடையும் போது இறந்துவிடும். இறந்த நண்டைச் சாப்பிடும் போது அதைப் பற்றிய காருண்யம் ஏற்படுவதில்லை. மேலும் வீட்டில் மற்றவர்கள் உடைத்து கறியாக்கும் போது நண்டின் உயிரைப் பற்றிச் சிந்திப்பதில்லை. அதிக அளவில் உள்ளியும், இஞ்சியும் போட்டு வாய்வு ஏற்படாமல் கறியாக்கினால் சுவையாக இருக்கும் என உருசியை மட்டும்தான் கவனத்தில் கொள்வது எமது வழக்கம்.

இங்கு சீனக்கடைகளில் நண்டுகளைப் பிடித்து அதனது கால்களை முறிக்காமல் சேர்த்து கட்டி வைப்பார்கள். அப்படி துடிக்கும் நண்டுகளை உண்ணாமல் காலம் கடத்தினேன். அன்று ஸ்பிரிங்வேல் மார்க்கட்டுக்குச் சென்றபோது பழைய நினைப்பு கனவுக்காட்சி போல் வந்தது.

நண்டை விலைக்கு வாங்குவதற்காக நண்டுப்பெட்டி அருகில் சென்ற போது, என் மனைவி என்னைக் கொலைகாரனைப் பார்ப்பது போல் பார்த்தாள். நண்டைக் கறி சமைப்பதும் எனது வேலையாகத்தான் இருக்கும் என நினைத்துக் கொண்டேன். மனைவிக்குப் பயந்து நண்டை வாங்காமல் செல்லும் கோழைகள் வர்க்கத்தில் சேர விரும்பவில்லை. இருபது டொலரைக் கொடுத்து எல்லாத்திலும் பெரிதாக உள்ள பாரிய நண்டைத் தூக்கி எடுத்து, காசு வாங்கும் பெண்ணின் மேசையில் வைத்தேன். நான் காசைக் கொடுத்து முடிப்பதற்குள் நண்டு மேசையை விட்டு ஓடிவிட முயன்றது.

சிரித்தபடியே, "நண்டு அகதி அந்தஸ்து கேட்டுத் தப்ப முயல்கிறது" என நகைச்சுவையை உதிர்த்தேன்.

"நண்டு உயிருக்குப் போராடுகிறது. அது உங்களுக்குச்

"நண்டு உயிருக்குப் போராடுகிறது. அது உங்களுக்குச் சிரிப்பாக இருக்கிறது," என் மனைவி, நண்டுக்காக வாதாடும் வக்கீலாகக் கன்னத்தில் அறைந்தது போல் கூறினாள்.

அந்தப் பதில் என் மனத்தில் கண்ணி வெடியை காஸ்சிலிண்டருக்குள் வைத்து வெடித்தது போல் இருந்தது. என் மனத்தில் இருந்த ஜீவகாருண்யம் சிதறியது. மிருக வைத்தியரான எனக்கு நாலுகால் பிராணிகள் மட்டுமே கருணைக்கு உரியவை என்ற அடிப்படையில் வைத்தியம் பார்க்கும்போது பத்துக்கால் நண்டுக்கும் உயிர்வாழ உரிமை உண்டு என்ற உண்மை புரியத் தொடங்கியது.

மனைவியுடன் தொடர்ந்து பேச்சு வைக்க விரும்ப வில்லை. கதையை வளர்த்தால் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைச் சட்டம், நண்டுகளுக்கும் பொதுவானது என விவாதிக்கச் சாத்தியக் கூறு உண்டு. பலகாலம் அகதிகள் கழகத்தில் வேலை செய்த நான், நண்டு வதை செய்த குற்றத்திற்காக மனசாட்சி என்ற கூண்டில் ஏற விரும்ப வில்லை. வாய் திறக்காமல் வீடு நோக்கி காரைச் செலுத்தி னேன். காரில் வரும்போது காரின் பின்பகுதியில் வைக்கப் பட்ட நண்டு தப்பியோட நடத்தும் போராட்டம் என் காதுக்குக் கேட்டது. நண்டு இருந்த பிளாஸ்ரிக் பை சலசலப்பை ஏற்படுத்தியது. பிளாஸ்ரிக் பையின் சலசலப்பு என் மனத்திலும் குறுகுறுப்பை ஏற்படுத்தியது.

நண்டைத் திருப்பிக் கொடுத்தால் யாராவது ஒருவர் வாங்கித் தின்னப் போகிறார். எனவே வேறு வழியில்லை. வீடு வந்தவுடன் நண்டை உபாதை இல்லாமல் மேல்லோகத்திற்கு அனுப்புவது என முடிவு செய்தேன்.

அதிலும் ஒரு சிக்கல்.

மற்ற மிருகங்களைப் போல் ஊசி மூலமோ அல்லது கலால் (Halal) முறையில் கழுத்தை அறுத்தோ கொல்ல முடியாது. நண்டை freezer க்குள் வைத்தால் உயிர்போகப்

பலநிமிடங்கள் செல்லும். எனக்குத் தெரிந்த ஒருவர் ஆயுதம் கடத்திற்காக 72 மணிநேரம் சிங்கப்பூரில் குளிர் அறையில் இருந்த பின்னும் உயிர் தப்பினார். எனவே நண்டுக்கு அந்த வழி சரிவராது.

அதன் கால்களை முறித்துவிட்டாலும் பலமணிநேரம் செல்லும். எனவே கடைசியில் சுடுதண்ணிக்குள் அழுத்துவது என முடிவு செய்தேன்.

பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்தபோதும் பல நிமிடங்கள் எடுத்தது. அந்த நேரத்தில் என்மனம் பலவற்றை நினைத்து, நண்டைக் கொலை செய்ய எவ்வளவு திட்டம் போடவேண்டி உள்ளது. மேசையில் உள்ள நண்டோ கடைசிவரையும் தப்பி ஓட முயற்சி செய்தது.

இலங்கை அரசியல் விடயங்களை வெளிநாட்டு பத்திரிகைகளில் பிரசுரிக்கும் போது கடைசிப் பந்தியில், "இருபது வருடங்களாக நடக்கும் இந்தச் சண்டையில் 70,000 பேர் மாண்டார்கள்" எனக்குறிப்பிடுவது வழக்கம். இந்தக் கணக்கு குத்துமதிப்பு என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் ஒரு நண்டைக் கொலை செய்ய இவ்வாறு திட்டம் போட்டு குற்ற உணர்வுடன் செய்ய வேண்டி இருக்கிறது. இந்த 70,000 மனிதர்களையும் கொலை செய்வது எவ்வளவு கடினமான காரியம். இவர்கள் இந்த நண்டைவிட உயிர் தப்புவதற்காக எவ்வளவு வேகமாக முயன்றிருப்பார்கள். இலங்கையில இநதப போா துவங்கிய பின் ஏழு இலட்சம் தமிழரும் சிங்களவருமாக வெளியேறி இருப்பார்கள். ஆகவே கணக்கியலின் அடிப்படையில் பத்துப் பேர் தப்பும் போது, ஒருவர் உயிர் இழக்கிறார் என நினைத்தேன்.

தண்ணி கொதிக்கும் சத்தம் கேட்ட போது யாழ்தேவி மாதிரி வேகமாக போய்க்கொண்டிருந்த என்மன எண்ணங்கள் ஒரு நிலைக்கு வந்தது. நண்டை எடுத்துத்

தண்ணியில் அழுத்தினேன். ஒரு நிமிட போராட்டத்துடன் மேல் உலகம் சென்றது.

நண்டைக் கொலை செய்துவிட்டு வெற்றியுடன் என் மனைவியைப் பார்த்தேன். உடனே சமைக்கும்படி கூறினாள். ஆரம்பத்தில் நண்டு வக்கீலாகிய என் மனைவி இப்பொழுது பொருளாதார நிபுணராகிறாள். இருபது ரூபாய் நண்டை வீணாக்க விரும்பவில்லை.

மிக வேகமாக நண்டைச் சமைத்துவிட்டேன். இனிமேல் சாப்பிடுவது கஷ்டமாக இருந்தது. வயிற்றுக்குள் பல பட்டாம்பூச்சிகள் சிறகடித்தன. மேலும் நண்டின் துடிப்புகள் கண்ணுக்குள் நின்றது. அலுமாரியில் இருந்து நெப்போலியனில் இரண்டு கிளாஸ் சாப்பிட்டேன். வயிற்றுக்குள் சென்ற நெப்போலியன் பட்டாம் பூச்சிகளைக் கொன்றுவிட்டான். ஆனாலும் இனிமேல் பெருநண்டு சாப்பிடுவதில்லை என சப்தம் எடுத்துக் கொண்டேன்.

❐

வா-5



# 18

## நாய் வயிற்றில் பலூன் !

**வா**ழ்க்கையில் ஒவ்வொரு வருக்கும் விசித்திரமான அநுபவங்கள் ஏற்படுவதுண்டு. அதிலும் மருத்துவத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர் நோக்கும் அநுபவங்கள், சிலவேளை களில், படிப்பினைகளையும் கற்றுத் தரும்.

எமது சமுதாயத்தில் ஆணாதிக்கம் மேலோங்கியிருப்பதாக குரல் எழுந்து கொண்டுதானிருக்கிறது. அதேசமயம், பிரச்சனைகளை எதிர் கொள்ளவும், ஏற்கவும் ஆண்கள் பின்தங்கிவிடும் சம்பவங்களும் உண்டு.

இதோ இந்தக் கதையைப் பாருங்கள். அன்று நான் பணிபுரியும் மிருக மருத்துவமனை அமைதியாக இருந்தது. இதற்கும் காரணமும் உண்டு.

அன்று மெல்பேனில் பிரபல்யமான இரண்டு குழுக்கள் மோதிக் கொள்ளும் Footy Match! M.C.G. நிரம்பி வழியும் நாள். அன்றைய தினம் M.C.G.க்கு செல்லும் பாதைகள் வாகன போக்குவரத்து நெருக்கடியினால் ஸ்தம்பிதமடைவது முண்டு.

வீட்டிலே T.V.க்கு முன்னால் குறிப்பிட்ட அணிகளின் மோதலைப் பார்த்து ரசித்து குதூகலித்தும், ஆத்திரப்பட்டும் ரசிகர்கள் தமது பொழுதைப் போக்குவார்கள். ம்ருத்துவமனையிலும் T.V.யில் குறிப்பிட்ட அணிகளின் மோதல் ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. எனது நர்ஸ் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள்.

அவள் match இல் லயித்துப் போயிருந்தாள். ஆட்டம் விறுவிறுப்பாக போய்க் கொண்டிருந்தது. இன்னும் பதினைந்து நிமிடங்களில் வெற்றி தோல்வி தெரிந்துவிடும்.

அப்போது அழைப்பு மணி ஒலித்தது. என்னுடன் பணியாற்றும் ஸ்ரீவன் கதவைத் திறந்தான்.

ஒரு யுவதி, இருபது வயதிருக்கும், கலைந்த ஆடையுடன் கையில் poodle நாயை ஏந்தியபடி பதட்டத்துடன் காணப் பட்டாள். அமைதியிழந்த தோற்றத்துடன் அவள் நின்றாலும், அவளுக்குப் பின்னால் ஓர் இளைஞன் தயங்கியபடி நின்றான். அந்த முகத்தில் வெட்கத்தின் சாயல் தெரிந்தது.

அவள் மட்டும் உள்ளே வந்தாள். அவள் அவனையும் அழைத்தாள். ஆனால், ஏனோ அவன் வரத் தயங்கினான். அவளை மட்டும், நாய்க்குரிய சிகிச்சை நடைபெறும் அறைக்கு அனுப்பிவிட்டு, அவன் வெளியே நின்றான்.

"நாய்க்கு என்ன பிரச்சினை?" நான் கேட்டேன்.

"எங்கள் நாய் பலூனை விழுங்கிவிட்டது. எனக்குப் பயமாக இருக்கிறது. எப்படியும் அந்த பலூனை எடுத்துவிட வேண்டும்."

ஏதோ பிறந்தநாள் விருந்திற்காக ஊதிக் கட்டப்பட்ட பலூனைத்தான் விழுங்கியிருக்கும் என நினைத்துக் கொண்டேன்.

T.V.யில் match இல் லயித்திருந்த நர்ஸை அழைத்தேன். அந்த யுவதியிடம் விபரங்களைக் கேட்டேன். அரைமணி நேரத்திற்கு முன்புதான் நாய் பலூன் விழுங்கியதாகவும், அதற்குத் தான் மட்டுமல்ல, தன்னுடன் வந்துள்ள Alex உம் சாட்சி என்கிற விபரம் வெளிவந்தது.

நான் சிகிச்சையை ஆரம்பித்தேன். வாசிங்சோடாக் கட்டிகளை நாயின் வாயில் பலவந்தமாகத் திணித்து அதனை வாந்தியெடுக்கச் செய்தேன். அதன் பின்பு ஸ்ரீவனை அழைத்து நாயை வெளியே சீமேந்துத் தரைக்குக் கொண்டு செல்லும்படி பணிந்தேன். நாய் சத்தியெடுக்கும். பலூனும் வெளியே வந்து விழும். நாயை ஸ்ரீபனுடன் அனுப்பிவிட்டு அந்த யுவதியுடன் பேச்சுக் கொடுத்தேன்.

"ஆமாம்... யாருக்கு Birthday party? அங்கேதானா உங்கள் நாய் பலூன் விழுங்கியது?"

"டாக்டர். எனது நாய் உண்டது பலூன் அல்ல... அதற்கெல்லாம் காரணம் வெளியில் எதுவும் தெரியாதவாறு நிற்கும் அந்த Alexதான்."

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் முகத்தையே பார்த்தேன். அதேசமயம் வெளியே ஸ்ரீவன், நாய் எடுத்த வாந்தியில் தடியால் கிண்டி எடுத்தபின்.... அது பலூன் இல்லை....!


எனக்குச் சிரிப்பு வந்தது.

"இனிப் பயப்படத் தேவையில்லை. அந்த பலூன் வந்துவிட்டது. நாயைக் கொண்டு செல்லுங்கள்."

அவளிடம் நாயை ஒப்படைத்தேன்.

"Bloody Condom இனால் ஒரு அருமந்த Matchஐ இன்று பார்க்க முடியாமல் போய்விட்டது" என்று முணு முணுத்தவாறு ஸ்டீபன் நர்ஸைப் பார்த்தான்.

❑



# 16

# பிரசவ வேளையில் அந்த நாள் ஞாபகம்

மேற்கு விக்டோரியாவில் Horsham என்கிற இடம். Beef Cattle எனப்படும் மாடுகள் வளரும் பண்ணைகள் இங்குண்டு. இந்த இனத்து மாடுகள் சராசரி 400 முதல் 450 கிலோ எடையுள்ளவை. அவற்றுள் Hereford எனப்படும் மாடுகள் கன்றுகளை சுகப்பிரசவமாகப் பிரசவிக்க வேண்டும். இல்லை என்றால் சத்திரசிகிச்சை மூலம் இந்த இனத்துப் பசுக்களுக்குப் பிரசவம் பார்ப்பது பெரும்பாலும் மிகக் கடின காரியம். ஒரு நாள் எனக்கு வந்த தொலைபேசி அழைப்பில் குறிப்பிட்ட இனத்து பசுமாடு தனது கன்றை பிரசவிப்பதில் சிரமப்படுவதாகத் தகவல் வந்தது. சென்றேன்.

எனது இருப்பிடத்திலிருந்து குறிப்பிட்ட பண்ணை சுமார் பதினைந்து கிலோமீட்டர் தூரம். அங்கு போய்ச் சேருவதற்குள் மாலை ஆறு மணியாகிவிட்டது.

கதிரவன் ஓய்வெடுக்கும் நேரம். இருள் கவியத் தொடங்கிவிட்டது. அந்தப் பண்ணையைச் சேர்ந்த ஜக், ஜேம்ஸ் என்ற இரு முதியவர்கள் பிரசவத்திற்குச் சிரமப் படும் பசுமாட்டைக் காண்பித்தார்கள். தனது கன்றைப் பிரசவிக்க இயலாமல், அது சுற்றிச் சுழன்று வந்து அவஸ்தைப்பட்டது. பார்க்கப் பரிதாபமாகவும் இருந்தது.

இருள் சூழ்ந்தமையால் வெளிச்சம் கேட்டேன். ஜேம்ஸ் துரிதமாக இயங்கித் தனது கார் பட்டரியின் மூலம் அங்கு மின்வெளிச்சத்தை வழங்கினார்.

மாட்டின் முதுகெலும்பில் விறைப்பு மருந்தை ஊசிமூலம் ஏற்றியதையடுத்து அது நிலத்தில் சரிந்தது.

அரைமணிநேர போராட்டத்தின் பின்பு பார்த்த பொழுது கன்று உள்ளே தலை திரும்பிய நிலையில் இறந்து இருந்தது. தரையில் வைக்கோல் பரப்பி சத்திர சிகிச்சையின் மூலம் இறந்த கன்றை வெளியே எடுத்தேன். இந்தச் சத்திர சிகிச்சையை நேரில் பார்த்துக் கொண்டிருந்த ஜக் - ஜேம்ஸ் இருவருக்கும் கடந்தகாலம் நினைவுக்கு வந்திருக்க வேண்டும்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது இராணுவத்தில் பணியாற்றிய ஜேம்ஸ் சிங்கப்பூரில் ஜப்பானியரிடம் பிடிபட்டு சித்திரவதைக்குள்ளான துயர அனுபவங்களை விரித்தான்.

இறைச்சியைப் பிரதான உணவாக உண்டு பழக்கப் பட்டு எண்பது கிலோ எடையிலிருந்த தான் ஜப்பானியரிடம் சிக்குண்டு வெறும் சோற்றை மாத்திரம் உண்டு நாற்பத்திரண்டு கிலோவாக உடல் இளைத்துப் போன கொடுமையைச் சொன்னான்.

"நாம் 'POW' ஆக நடத்தப்படவில்லை. சித்திரவதைக் குள்ளானோம். இரவில் தூங்கவிடாமல் தொடர்ச்சியாக நிற்கவைப்பார்கள். இது போதாதென்று அடி, உதை, ஆண்

உறுப்பில் தாக்குதல். எதிர்த்து ஏதும் சொன்னால் மரணதண்டனைதான்." POW என்றால் Prisonor Of War.

பசிக்கொடுமை தாங்கமுடியாமல் சாக்கடையில் ஓடிய எலிகளை பிடித்துத்தின்ற துயர அநுபவத்தையும் ஜேம்ஸ் சொன்னான். கேட்கும்போது திகைப்பாகவும் அதிர்ச்சி யாகவும் இருந்தது.

இரண்டாவது உலக யுத்த சித்திரவதைகளை அவன் சொன்னபோது, எனக்கு எனது தாய்நாட்டின் யுத்தக் கொடுமைகளும் கைதாவோர்மீது மேற்கொள்ளப்படும் சித்திரவதைகளும் நினைவுக்கு வந்தன.

எனது நாடு Sri Lanka என்று அறிந்ததும், அங்கு தொடரும் யுத்தம் காரணமாக அந்த நாட்டையும் அவன் அறிந்திருப்பதைக் தெரிந்துகொண்டேன்.

ஜேம்ஸிடம் குடும்பம் பற்றி விசாரித்தேன். ஜப்பானியரின் சித்திரவதைகளினால் தான் ஆண்மை இழந்துவிட்ட துயரத்தை வேதனையுடன் கூறினான்.


திருமணம் செய்யும் தகுதியைத்தான் இழந்து விட்டதனால், பிரமச்சாரியம் தொடருவதாக சொன்னான். தனக்குத் துணையாக சகோதரன் ஜக் இருக்கிறான் என்றும் அவனுக்கும் குடும்பம் இல்லை என்றும் சொன்னான்.

"எனது குடும்பம் இப்போது இந்த மாட்டுப் பண்ணை தான். இந்த மாடுகள்தான் எனது குடும்ப அங்கத்தவர்கள். அது பிரசவ வேதனையால் துடிப்பதைப் பார்த்துவிட்டுத் தான் உங்களுக்கு அழைப்பு விடுத்தோம்."

ஜேம்ஸ் - ஜக் சகோதரர்களின் அந்த மிருகங்களின் மீதான பாசத்திற்கு அவர்கள் அந்த பிரசவ வேளையில் துரிதமாக இயங்கியமை அடையாளம்.

மனித சித்திரவதையின் கொடுமையை தாங்கிய ஜேம்ஸ், அந்த வாய்பேசா மிருகத்தின் அவஸ்தையை தாங்கிக் கொள்ள சிரமப்பட்டார்.

❑



# 20

## இது ஒரு ராணியின் கதை



இவள் எந்தவொரு நாட்டையும் ஆளவில்லை. இவளுக்கென்று பிறந்த நாள் விடுமுறை பிரகடணப்படுத்தவும் இல்லை. அவளின் பெயர் 'ராணி' என்பது அவளை அவ்வாறு நான் அழைக்கும் போதுதான் தெரியும். மற்றவர்களுக்கு அவள் ஒரு 'பிராணி', எனக்கோ அந்த 'பி' எழுத்தை அகற்றித்தான் பார்க்க முடியும்.

ஒரு குளிர்கால இரவில், அவள் என்னிடம் அழைத்துவரப்பட்டவேளை, நாம் மருத்துவமனையை மூடிவிட்டு வீடுகளுக்கு புறப்படும் நடுச்சாமம்.

அம்புலன்ஸ் வண்டியில் ஒரு சிறிய கூண்டிலே அடைக்கப்பட்டு அழைத்துவரப்பட்ட கர்ப்பிணியான பூனையே ·இந்த ராணி.

பிரசவத்துக்கு இடம்தேடி அலைந்து ஒரு வீட்டின் அருகே ஒய்வெடுத்துப் பதுங்கியிருந்த அனாதைதான் இந்தப் பிராணி.

அதன் கழுத்தில் நகரசபையின் அடையாளம் பொறிக்கப்பட்ட பட்டியும் இல்லை.

முதுமையை அடைந்துள்ள அந்தப் பூனையைக் கர்ப்பிணியாக்கிய மற்றப் பூனைக்கு என்ன நேர்ந்திருக்கும்? தனது இச்சை தீர்ந்தபின்பு 'ஓடி'ப்போயிருக்கலாம். ஜெயகாந்தன் எழுதிய வேசியின் தாலாட்டு என்ற கவிதை தான் எனக்கு நினைவுக்கு வந்தது.

தனது பிள்ளையைப் பார்த்து அவள் தாலாட்டு பாடுகிறாள் இவ்வாறு: "கடவுளைப் போன்று உனக்கும் தந்தை இல்லை."

இந்தப் பூனையை தாயாக்கிய பூனையை மறந்து விடுவோம்.

இவ்வாறு அனாதரவாக அலையும் வயோதிப பூனை களைத் தத்து எடுத்து வளர்ப்பதற்கு எவரும் முன்வருவது இல்லை.

தெருவில் கண்டுபிடித்து அழைத்து வந்த அம்புலன்ஸ், எங்கள் மருத்துவமனையில் அதனை ஒப்படைத்துவிட்டுப் போய்விட்டது.

இந்த நிலைமையில் வரும் பிராணிகள் கருணைக் கொலையின் மூலம் பரலோகம் அனுப்பப்படுவதே நடை முறை. எனது நர்ஸ் மரிக்கா, எனது ஆழ்ந்த யோசனையை பார்த்துவிட்டு, "முதலில் பரிசோதனை செய்வோம் பிறகு முடிவு செய்வோம்" என்றாள்.

அந்த நர்ஸ் மிகவும் மென்மையான உணர்வு கொண்டவள். ஒரு மனிதாபிமானி மாத்திரமல்ல, ஜீவராசி களையும் நேசிக்கும் இயல்பு கொணடவள்.

அநாதரவான பல பூனை நாய்களைத் தனது வீட்டில்

வளர்த்து பாதுகாத்து பராமரிப்பவள். வீட்டுக்கு வருபவர்கள் விரும்பும்போது வளர்ப்பதற்காக கொடுத்தனுப்புவாள். வாய் பேசாத இந்த ஜீவன்களுக்காக அவள் காட்டும் கருணைக்காகவே அவளுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கலாம்.

பூனையைப் பரிசோதித்தபோது, ஒரு குட்டி தனது தலையை வெளியே நீட்டி, இந்த அழகான உலகத்தை தரிசிக்க தயார் நிலையில் இருந்தது. ஆனால் அதன் கழுத்து மடங்கியிருந்தது.

தாய்ப் பூனைக்கோ பிரசவவேதனை.

இத்தகு சந்தர்ப்பத்தில் 'சிசேரியன்' தான் சிறந்த வழி. நேரமோ நடுச்சாமம். மருத்துவமனையை மூடிவிட்டு நாம் புறப்பட வேண்டிய நேரம்.

மனிதாபிமான உணர்வுகள் எம்மை இழுத்துப்பிடித்து நிற்கவைத்தன. பொக்கட்டினுள் சாவியை எடுக்க வேண்டிய கைகள், சத்திரசிகிச்சைக்கான கருவிகளை எடுக்க எழுந்தன. மேலதிக உழைப்பு (Overtime) ஊதியத்தைத் தியாகம் செய்து விட்டு, அதற்குச் சிகிச்சை அளிக்க தயாரானோம்.

இரண்டு குட்டிகள் உயிர் தப்பின. ஒன்று இறந்த நிலையில் பிறந்தது.

நானும் மரிக்காவும் எமக்குள் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம்.

தாய்ப் பூனையை எனது பொறுப்பில் மருத்துவமனையில் ஒரு வாரகாலம் வைத்திருப்பது என்றும், பின்பு கொடுப்பது என்றும்; குட்டிகளை நர்ஸ் மரிக்கா தன்னோடு கொண்டு சென்று வளர்ப்பது என்பதும் எமது புரிந்துணர்வு ஒப்பந்தம்.

அவ்வாறே செய்தோம். தந்தை யார் என்று தெரியாத அந்தக் குட்டிகள் தாயும் இன்றி மரிக்கா வீட்டில் வசிக்கப் புறப்பட்டன.

எனது வீட்டில் என் மனைவிக்குப் பூனையைப்

பிடிக்காது. வீட்டில் உதிரும் பூனை மயிர்களால் 'ஆஸ்த்மா' போன்ற நோய்கள் வருவதற்கு வாய்ப்புண்டு என்பது டொக்டரான அவளது வாதம். பூனையை வீட்டுக்கு அழைப்பதற்கு தடை உத்தரவு பிறப்பித்தாள் இல்லத்தரசி.

'ராணி'யை — என்று நான் பெயர் சூட்டிய இந்த பூனையை — 'இல்லத்துராணி' ஏற்கவே மாட்டாள். ஒரு வார காலம் மருத்துவமனையில் பராமரித்தேன். எதிர்பார்த்த பிரகாரம், எவரும் அதனை தத்து எடுத்து வளர்க்க வரவில்லை. ராணியை எனது வீட்டுக்கு அழைத்துச் செல்லத் தருணம் பார்த்திருந்தேன். தருணத்திற்காக காத்திருப்பதும் ஒருவகையில் கொடுமைதான்.

அந்த நல்லநேரம் மனைவி பிள்ளைகளுடன் அவளது பெற்றோரைப் பார்ப்பதற்கு சிட்னிக்குப் புறப்பட்ட வேளையில்தான் வந்தது.

இல்லத்தரசி புறப்பட்டாள். இதயராணி வீட்டுக்கு வந்தாள்.

இல்லத்தரசிக்கு என் நினைவும், இல்லத்தின் ஞாபகமும் வந்ததும், வருகை தந்தாள். நான் வளர்க்கும் ராணியைக் கண்டதும், 'ஒஸாமா பின்லேடனின் படத்தைப் பார்க்கும் ஜோர்ஜ் புஷ்' போன்று முகத்தை நீட்டி முழக்கினாள்.

ஏற்கனவே, எங்கள் வீட்டில் ஒரு நாய் சுதந்திரமாக வளர்கிறது. அதற்குப் பூனையின் வருகை, தலிபானின் வருகைக்கு ஒப்பானது.

நாயும் பூனையும் வீட்டினுள் யுத்தம் பிரகடனப்படுத்தி ஓய்ந்தன. இறுதியில் அவை தமக்கிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்திருக்க வேண்டும். நாய் வீட்டின் பின்கட்டிலிலும், பூனை முன்புறத்திலும் வாழத் தலைப்பட்டன. எல்லை பிரித்துச் சண்டை பிடிப்பவர்கள் இந்தப் பிராணிகளிடம் பாடம் கேட்டுப் படிக்கலாம்.

கிணற்றில் விழுந்த சிறுகல் வளையங்களை தோற்றுவித்து

ஓய்வது போன்று என் மனைவியும் பூனை எதிர்பலைகளில் ஓய்ந்தாள்.

பசிக்கும்போது ராணி வந்து எமது கால்களை உராய்வாள். மடியில் ஏறி விளையாடி தனது மகிழ்ச்சியைத் தெரிவிப்பாள். பூனைகளை வெறுக்கும் இல்லத்தரசிக்கும் ஆதிகால எகிப்தியர் முதல், அழகழகான கதைகள் சொன்ன எங்கள் பாட்டிவரையில், பல சுவாரஸ்ய விஷயங்களைச் சொன்னேன்.

எகிப்தியர்கள் ஆதிகாலத்தில் பூனைகளைத்தான் தெய்வமாக வழிபட்டார்கள். பூனைகளுக்கு கெடுதல் செய்தல் அந்தணர்களுக்கு கேடு விளைவிப்பதற்கு ஒப்பானது என்பது என் பாட்டியின் கதையளப்பு.

பூனைகள் இயல்பில் மென்மையானவை. அதே சமயம் தனது உணவுத் தேவைக்கு வேட்டையாடும்போது கொடூரமாகவும் நடந்து கொள்ளும். எங்கள் வீட்டு ராணியும் அப்படித்தான்.

சிறிய பறவைகளைக் கண்டால் மிகவும் தந்திரமாக அருகே சென்று கவ்விப்பிடித்து சாப்பிட்டுவிடும். அதன் கழுத்தில் மணி இருந்தது. எனினும், அந்தமணி நாதமெழுப் பாமல் பவ்வியமாக பதுங்கிச் சென்று வேட்டையாடும் கலையில் கைதேர்ந்தவள் இந்த ராணி.

ஒரு நாள், நான் வேலைமுடிந்து திரும்பிய நேரம். வீட்டு வாசலில் ராணியின் வாயில் ஒரு சிறு குருவி ஜீவமரணப் போராட்டத்தில் சிக்குண்டிருந்தது. என்கையில் எந்த ஆயுதமும் இல்லை, அந்தக் குருவியை பூனையிடம் இருந்து பாதுகாப்பதற்கு! பத்திரிகையைச் சுருட்டி பூனையின் தலையில் அடித்தேன். குருவி உயிர் பிழைத்தது.

ஆனால், அன்று முதல் பூனைக்கு என்மீது வெறுப்புத் தோன்றியிருக்க வேண்டும். வேட்டையை முறி யடித்த எதிரியாகிவிட்டதனால் இருக்க வேண்டும். முன்னரைப் போன்று அடிக்கடி அருகே வருவதும் குறைந்து இடைவெளி

அகலித்தது.

கோடை விடுமுறையில் குடும்பமாக வெளியே சென்றிருந்தோம். புத்தாண்டு பிறக்கும் வேளையில் வீடு திரும்பினோம். இரவு பன்னிரண்டு மணிக்குத் தொலைக் காட்சியில் புத்தாண்டு பிறக்கும் நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க, அதன் முன்பாக அமர்ந்தபோது, நீண்ட இடை வெளிக்குப் பின்பு, ராணி ஓடிவந்து என் மடியில் தாவியது.

தொலைக்காட்சியை ரசிக்கும் ஆர்வத்தில் ராணியை வெளியே தள்ளவிட்டு கதவைச் சாத்தினேன். தொலைக் காட்சி நிகழ்ச்சி முடிய, அதனை நான் உள்ளே அழைத்திருக்க வேண்டும். நித்திராதேவி அழைத்தமையால் உறங்கிவிட்டேன். ராணியையும் மறந்துவிட்டேன்.

முதலாம் திகதி விடிந்தது.

ராணியைத் தேடினேன். காணவில்லை. வீதிகளிலும் அயல் வீடுகளிலும் தேடி அலைந்தேன். காணவே இல்லை. முதல் நாள் இரவு, பிரியாவிடை சொல்லத்தான் மடியில் தாவி ஏறினாளா?

'ராணியைக் கண்டுபிடித்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் தரப்படும்' என்று சுவரொட்டிகள் மூலமும் விளம்பரம் செய்தேன்.

ராணி கிடைக்கவேயில்லை. ஒரு நாள் நடு இரவில் பிரசவத்திற்காக வந்தவள், இன்னுமொரு நடு இரவில், விடைபெற்றாள். ராணியின் நினைவுகள் மட்டும்தான் எஞ்சியிருக்கின்றன.

❑

# 21

# இப்படியும் ஒரு தியாகம்



'பமலா' என்ற சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க அந்தப் பெண்ணைப் பார்க்கும் போதெல்லாம் கவச குண்டலங்களுடன் பிறந்த கர்ணன்தான் எனக்கு நினைவுக்கு வரும்.

இந்த மனுஷி அந்த உடையை மாற்றவே மாற்றாதா? பாண்டல் மணத்துடன் அதே உடையில் அந்த மிருக மருத்துவமனைக்கு அவள் வரும்போதெல்லாம் ஏனைய டாக்டர்களும் தாதிகளும் மூக்கைப் பொத்திக் கொண்டு அகன்று செல்வதையும் கவனித்துள்ளேன்.

எனினும் தனது செல்ல நாயுடன் அதன் சிகிச்சைக்காக வரும் அப்பெண்மீது எனக்கு ஒருவகை அநுதாபம் உண்டு. அதற்குக் காரணங்களும் உண்டு.

தாய் தந்தையற்ற அனாதைகளுடன் ஒரு அனாதை யாக இரண்டாம் உலக யுத்தம் முடிந்த பின்பு இங்கிலாந்து அனுப்பிய கப்பலில் இங்கு வந்து சேர்ந்தவள்தான் இந்த பமலா.

இப்படி வந்தவர்கள் பலர் கிறிஸ்தவ அனாதை இல்லங்களில் வளர்ந்தவர்கள். சிலர் நன்றாக வளர்ந்தார்கள். சிலர் சமுதாயத்திற்கு பாரமாக வாழ்ந்தார்கள்.

திருமணமே இவளுக்கு நடக்கவில்லை. ஒரு தொடர் மாடிக்குடியிருப்பில் அரசின் நிதி உதவியை ஆதாரமாகக் கொண்டு வாழ்கிறாள் பமலா.

இந்த அனாதைப் பெண்ணுக்கு துணை லசி, ரிக்கி என இரு நாய்கள். அவளது வாழ்வின் நம்பிக்கையே இந்த நாய்கள்தான். இந்தப் பெண் தனது நாய்களுக்காக சிகிச்சைக்கு என்னிடம் வரும்போது அவளைத் தவிர்த்துக் கொள்வதற்காக ஓடி மறையும் மற்றவர்கள் ஏக குரலில் சொல்வார்கள் "அதோ உனது 'Girl friend' வருகிறாள்... போய் கவனி."

நான் சிரித்துக்கொண்டே அவளைச் சாதாரணமாக அழைப்பேன்.

பமலாமீது எனக்கு மேலும் அநுதாபம் தோன்றக் காரணம், அவள் தனது ஆதாரங்கள் என்று நினைத்து வாழ்ந்தவற்றில் ஒன்றைப் பறிகொடுத்துவிட்டாள்.

அவளது வளர்ப்பு நாய்களில் ஒன்றான ரிக்கி கல்லீரல் புற்றுநோயினால் பாதிப்புற்றிருந்தது. கருணைக்கொலை புரிந்து அதனை மேல் உலகம் அனுப்பியாயிற்று. இப்போது பமலாவுடன் இருப்பது லசி மட்டும்தான்.

மீண்டும் ஒருநாள் 'லசி'யுடன் பமலா வந்தாள்.

"என்ன?"

"டொக்டர் லசியும் இறந்துபோன ரிக்கியைப் போன்று

இருமுகிறது. புற்றுநோய் இதற்கும் தொற்றிவிட்டதோ என்று கவலையாக இருக்கிறது" என்றாள் பமலா.

நாயை சோதித்தேன். நாய் ஆரோக்கியமாகத்தான் இருந்தது. ஆனால் அது சுவாசிக்கும்போது மட்டும் 'ஆஸ்துமா' அறிகுறி தென்பட்டது.

X-ray எடுத்துப் பார்த்தேன். சுவாசப்பை சுருங்கியிருந்தது. நாய்களுக்கு மனிதர்கள் போன்று ஆஸ்த்துமா வர வாய்ப் பில்லை. 'அன்ரிபயற்றிக்' கொடுத்து அனுப்பினேன்.

ஆயினும் அது குணமடையவில்லை. தொடர்ந்து அதற்கு இருமல். விசேட வைத்திய நிபுணரிடம் நாயைக் கொண்டு சென்று காட்டுவதற்கும் அவளுக்கு பணவசதி குறைவு. நாயின் சுவாசக்குழாயைக் கழுவிப் பரிசோதித்த பொழுது அலர்ஜியால் அது பாதிப்படைந்திருப்பது தெரிந்தது.

எமது மருத்துவமனை அம்புலன்ஸ் சாரதி நாயை அவளது வீட்டில் விட்டுத் திரும்பியதும் என்னிடம் வந்து சொன்னான். "பமலாவின் Flat அவளைப் போலவே நாறுகிறது. ஒரே சிகரட் மணந்தான். வயிற்றைக் குமட்டுகிறது" என்றான்.

அப்பொழுதுதான் அந்த நாயின் இருமலுக்கான காரணம் எனக்குத் தெரிந்தது.

பின்பு அவளைத் தொலைபேசியில் அழைத்து விசாரித்தேன். தனது தொடர்ச்சியான சிகரட் பாவனையை ஒப்புக்கொண்டாள்.

"உனது சிகரட் புகைதான் இந்த நாய்க்கு அலர்ஜியாகி இருமல் விட்ட்பாடில்லை... "சிகரட் புகை குடிப்பதாயின் வெளியே போய் இருந்து குடி..." என்றேன்.

"இந்தக் குளிரில் எப்படி டாக்டர் வெளியே போயிருந்தது சிகரட் புகைப்பது.... ஒரே வழி... எனது 'லசி'க்

காக இனிமேல் சிகரட்டையே தொடாமல் இருக்கிறேன்."

அவள் சொன்னபடி செய்தாள். பமலாவுக்கு இப்பொழுது சிகரட் இல்லை; லசிக்கு இருமலும் இல்லை.


Pramஇல் குழந்தையை வைத்துத் தள்ளிக்கொண்டே வளையம் வளையமாக சிகரட் புகையை ஊதித்தள்ளும் தாய்மார்தான் பமலாவை நினைக்கும் பொழுது என் மனசில் மிதக்கிறார்கள்.

❑



# 22

## 4¼ உள் கலவி



ஷரன் தனது நாய் விவகாரம் தொடர்பாக தொலைபேசியில் அடிக்கடி 'அலுப்பு' கொடுப்பவள். ஒரு நாள் இரவு எனது 'மொபைல்' போன் சிணுங்கியது.

அவளே தான்.

"எனது நாய் Princess குட்டிபோடுவதற்கு மிகவும் சிரமப்படுகிறது" என்றாள்.

குறிப்பிட்ட நாய் கர்ப்பமடைய காரணமான நாய் பற்றி விசாரித்து விட்டு, சொற்ப வேளையில் மீண்டும் கோல் எடுக்குமாறு சொன்னேன். சுமார் இரண்டு மணித்தியாலத்தின் பின்பு, தனது நாய்க்கு ஆண்குட்டி பிறந்திருக்கிறது என்கிற தகவலை ஷரன் சொன்னாள்.

இச்சம்பவம் நடந்து ஆறுமாதம் கழிந்தபின்பு மீண்டும் அவளிடமிருந்து கோல்.

"என்ன?" என்று கேட்டேன்.

"Princess குட்டிபோட மிகவும் சிரமப்படுகிறது" என்றாள் ஷரன்.

"எந்த நாய்?" என்று பிறக்கவிருக்கும் குட்டியின் தந்தை நாயை விசாரித்தேன்.

"Oscar" என்றாள்.

"அப்படியா... ஆறுமாதத்திற்கு முன்பு Princess இற்கு பிறந்ததுதானே இந்த Oscar?"

என் சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்திக் கேட்டேன்.

"ஆமாம்... Oscar தான் காரணம்."

"ஷரன்... இப்படி உள் இனக் கலப்பு செய்தால் குட்டி ஊனமாகத்தான் பிறக்கும். அதனால், எதற்கும் Oscar இற்கு ஒப்பரேஷன் (Desexing) செய்யவேண்டும்" என்றேன்.

நல்ல வேள்ளையாக, பிறந்த குட்டி ஆரோக்கியமாகப் பிறந்தது. இந்தக் குட்டி பெண்.

மேலும் ஆறுமாதம் கடந்த பின்பு, குறிப்பிட்ட பெண் நாய்க்குட்டி, பிரசவத்திற்கு தயாராக இருப்பதாகவும் பிரசவத்திற்கு சிரமப்படுவதாகவும் ஷரன் ரெலிபோனில் சொன்னாள்.

"சரி... இந்த முறை இந்தப் பெண் குட்டியை தாயாக்கிய நாய் எது?" என்று சந்தேகத்துடன் கேட்டேன்

"Oscar" - என்ற பதில் கேட்டு திகைத்தே விட்டேன்.

"Oscar தாயுடனும் தங்கையுடனுமா?" எனக்கு ஆத்திரம் தான் வந்தது.

"ஷரன்... உங்களுக்கு எவ்வளவு சொல்லியும் பலன் இல்லை. பிறக்கும் குட்டி ஊனமுடன்தான் பிறக்கப் போகிறது" எனச் சொல்லி ரெலிபோனை வைத்தேன்.

ஒரு வாரத்தின் பின்பு ஷரன் சிறிய நாய்க்குட்டியை

கொண்டுவந்து கருணைக் கொலை செய்யுமாறு கேட்டாள். அதற்கு ஒரு கால் இல்லை. அதனால் அப்படி ஒரு வேண்டுகோள்.

"இப்பொழுதாவது உணர்ந்தால் சரி. இரண்டு தலை முறைக்குள் உள்ளின கலப்பு விருந்தி செய்தால் விளைவு இப்படித்தான் அமையும்" எனச் சொன்னேன்.

இதனை எழுதும்போது தமிழ் நாட்டில் நான் பணிபுரிந்த பண்ணை யொன்றில் நிகழந்த சம்பவம் நினைவுக்கு வருகிறது.

அந்தப் பண்ணையில் வேலப்பன் என்ற ஒரு நபர் வேலை செய்தான். அவன் ராமநாதபுரத்திற்கு பக்கத்தில் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவன். மேலும் தான் கட்டபொம்மனின் வழித்தோன்றல் எனவும் பெருமையாக சொல்லிக் கொள்வான். அத்துடன் தமது பரம்பரை ஆந்திராவைச் சேர்ந்தது எனவும் கூறுவான். இந்த வேலப்பனுக்கு அதே பண்ணையில் வேலை செய்த மற்றுமொரு பணியாளான தேவி என்ற பெண்ணுடன் தொடர்பு இருந்தது. ஆனால், அவளை அவன் மணம்முடிக்க விரும்பவில்லை.

"வேலப்பா... ஏன் தேவியை திருமணம் செய்ய மறுக்கிறாய்?" எனக் கேட்டேன்.

"சார்... எனக்குக் கிராமத்தில் முறைப் பெண், அதாவது என் அக்கா மகள் இருக்கிறாள். அவளைத்தான் நான் மணம் செய்ய முடியும்" என்றான்.

வயதைக் கேட்டேன்.

"ஏழு சார்..."

"அடப்பாவி... இருபத்தெட்டு வயதான நீ.... ஏழுவயதில் பெண்பிள்ளையை.... எப்படி....?" வியப்புடன் கேட்டேன்.

"எமது நாயக்கர் வம்ச முறைப்படி, நான் அக்கா மகளைத்தான் மணம் செய்ய முடியும். அவள் இப்போது ஏழு வயதுதான். பருவமடைந்தபின்பு மணம் முடிப்பேன்.

இல்லையென்றால் விவசாய நிலம் சொத்து யாவும் பிரிந்துவிடும்” என்றான்.

அந்தக்காலத்தில் ஐரோப்பாவில் அரச கிரீடங்களை கவனத்திற் கொண்டு திருமணங்கள் நிச்சயிக்கப்பட்டன. இந்தக் காலத்தில் காணி, சொத்து, கவனத்தில் கொள்ளப் பட்டது.

மெண்டலுக்கும் டார்வினுக்கு இவை விளங்காது.

❑



# 23

## வாழ நினைத்தால் வாழலாம்

[மெக்சிக்கோ ஏரியில் இருந்து 250 மில்லியன் வயதான நீர்வாழ் பக்ரிரியா கண்டுபிடிப்பு என்ற செய்திக் குறிப்பும், மனிதனுக்கும் மட்டும் ஆன்மா சொந்தமல்ல என்ற ஒரு நம்பிக்கையின் விளைவும், சிறு வயதில் என்னை மிகவும் பாதித்த எழுத்தாளர் ஜெயகாந்தனது ஒரு படைப்பில் சீமை நாயினதும், உள்ளூர் நாயினதும் கள்ளக் காதல் விவரிப்பு முறையில் ஏற்பட்ட பிடிப்பும், தற்காலத்தில் விடுதலைப் புலிகள் சயனைட்டை பாவித்து தற்கொலை செய்வதால் ஏற்பட்ட மனப்பாதிப்பும், மனிதருக்கு மட்டுமல்ல

சகல ஜீவராசிகளுக்கும் கருத்துச் சுதந்திரம் இருக்க வேண்டும் என்ற (பைத்தியக்கார) எதிர்பார்ப்பின் விளைவுமே இச்சிறுபடைப்பு.]

இந்து சமயத்தில் ஹரனும் ஹரியும் சேர்ந்து சபரிமலை ஐயப்பன் என்னும் தெய்வத்தை உருவாக்கினார்கள். இரண்டு ஆண் தெய்வங்களுக்கு வாரிசான ஐயப்பனுக்கு மாலை போட்டால் அம்மாதம் முழுவதும் பெண் உறவை தவிர்க்க வேண்டும். இந்த கதையின் அடிமூலத்தை நான் ஆராய விரும்பவில்லை.

இந்த கதையில் வரும் ஹரியும் ஒரு விசித்திரப் பிறவி. நமது கதாநாயகன் மெக்சிக்கோவில் ஓர் ஏரியில் பிறந்தான். அதுவும் *250 மில்லியன்* வருடங்களுக்கு முன்பாக அவதரித்தவன்.

இந்தக் காலத்தில் மனிதர்கள் தோன்றவில்லை. ஏன் டைனேசர்கூடத் தோன்றவில்லை. தற்போது காணப்படும் தாவர வகைகள்கூட தோன்றவில்லை.

ஆண்டவன் இருந்தானோ எனக்குத் தெரியாது. ஆனால் எந்தச் சமயமும் அந்தக் காலத்தில் இருக்கவில்லை. மனிதன் தோன்றாமல் மதம் எப்படித் தோன்றியிருக்க முடியும்?

சக்தி ஒரு நீர் வாழும் பாக்ரீரியா. ஏரியில் தனிமையாக வாழ்ந்தாள். உறவினர் ஒருவருமில்லை. எல்லாரும் இறந்துவிட்டார்கள். சக்தியின் சகோதரியும் கடைசியில் இயற்கை எய்திவிட்டாள். இக்காலம் போல் இனகலவரத்திலோ அல்லது அணுக்குண்டுக்கோ இரையாகி அவர்கள் இறக்கவில்லை. இயற்கையின் அகோரத்தால் அவர்கள் அழிக்கப்பட்டவர்கள்.

மழைவெள்ளத்தால் ஏரி நிரம்பும் போது பல மடங்கான உப்புகளை வெள்ளம் கொண்டு வந்து சேர்த்தது. தொடர்ச்சியாக வந்த உப்பினால் எந்த ஜீவராசிகளும் சுவாசிக்க முடியவில்லை. ஆரம்பத்தில் கடலைவிடப் பல

மடங்கு அதிகமாக இருந்த உப்பு, கடைசியாகப் பளிங்காக மாறியது. வாழ்வதற்குத் தண்ணீர் கிடைக்காமல் உப்புத் தண்ணீரில் வாழும் பாக்ரீரியாக்களும் மரணத்தைத் தழுவின.

இயற்கை மாதா இரு கட்டளைகளை எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவாக இட்டாள். எல்லாரும் வாழவேண்டும்; அத்துடன் தங்கள் வாரிசுகளையும் உருவாக்க வேண்டும். இந்தக் கட்டளையை சிரமேற்கொண்டு வாழும் உயிரினங்களில் பக்ரீரியாக்கள் முதன்மையானவை. இவை இரண்டாகப் பிறந்து தமது வாரிசுகளை உருவாக்கும். இந்த ஜந்துகளுக்கு பெரும்பாலும் கலவி சுகம் கிடைப் பதில்லை. சில இடர்பாடுகள் வரும் போது கலவி செய்து பரம்பரை அலகை (gene) மாற்றும். இதன் வழிமுறையில் தான் மனிதன் இப்பொழுது Genetic Engineering எனப் புதிய பெயர் கொடுத்தான்.

மீண்டும் எமது ஹரியைச் சந்திப்போம்.

"சக்தி" இரண்டாக பிறந்து ஹரன், ஹரி எனும் இரு வாரிசுகளை உருவாக்கிவிட்டுச் சென்றாள்.

மனிதரைப் போலல்லாது பக்ரீரியாக்கள் இருபது நிமிட நேரம்தான் வாழமுடியும். இதற்குள் வாழ்க்கையில் கடைசித் துளியையும் அநுபவித்துவிட்டு வாரிசை உருவாக்கி விட வேண்டும்.

ஹரனதும், ஹரியினதும் சம்பாஷனையைக் கேட்போம். இருவருக்கும் பளிங்கில் வாழ முடியவில்லை. நடுங்கியபடியே சம்பாஷிக்கிறார்கள்.

ஹரி : உடம்பெல்லாம் வலிக்கிறது. வாழ்க்கையே வெறுக்கிறது.

ஹரன் : வேறுவழி இல்லை. தற்கொலை செய்வோம்.

ஹரி : டேய் தற்கொலை செய்வது கோழைத்தனம்.

ஹரன் : தற்கொலை செய்வது வீரமாகும். தன் உயிரை எடுப்பதற்குத் துணிவு வேண்டும். வீரம் வேண்டும். கடைசிவரையும் இருந்து இழுத்துச் சுருங்கி

இறப்பது எனக்குப் பிடிக்கவில்லை.

ஹரி : எம் தாயும் உன்னைப் போல் நினைத்திருந்தால் நாங்கள் உருவாகி இருப்போமா? மேலும் போராடி வாழ்வதே வாழ்க்கை. அதுதான் எனக்குப் பிடிக்கும்.

ஹரன் : எனது உடல் பாதி சுருங்கிவிட்டது. மறுபாதி உப்புப் பளிங்காகிவிட்டது. இந்தநிலையில் நீ வாழும் சந்ததியைப் பற்றிப் பேசிக் கொண்டிருகிறாய்.

ஹரி : உன்னைத் திருத்த முடியாது. நான் எங்கள் இனத்துக்கே உரிய கடைசி ஆயுதமான Spore (விதை) ஆகப்போகிறேன்.

ஹரன் : உப்புப்பளிங்கில் விதையாகி என்ன செய்யப் போகிறாய்? எப்பொழுது மீண்டும் உயிர்ப்பெற்று வாழமுடியும். பல மில்லியன் காலங்கள் ஆகலாம். அக்காலத்தில் நீ வாழும் சூழல் இருக்குமா? என் வழிக்கு வரச் சொல்லவில்லை. ஆனால் உனது வாழ்க்கை நிரந்தரமான கேள்விக் குறியாக மாறும் என எச்சரிக்கிறேன்.

ஹரி : நம்பிக்கை இருந்தால் மில்லியன் அல்ல, பில்லியன் வருடங்களானாலும் உயிர் வாழலாம். உன்னைப் போல் நான் தற்கொலை செய்யப் போவதில்லை.

ஹரன் : தற்கொலை செய்தால் வீர சுவர்க்கம் அடையலாம். எமது இனத்தில் பலர் உன்னை வாழ்த்துவார்கள். இனிவரும் பக்ரீரியாக்கள் எல்லாம் உன் பெயர் சொல்லும். எதற்கும் சகோதர பாசத்தில் உனக்குச் சொல்ல வேண்டியதை சொல்லிவிட்டேன். நான் போகிறேன்.

இவ்வாறு கூறித் தனது கடைசி மூச்சை விட்டது.

ஹரி தனது உடலைப் போர்வை மூடுவது போல் ஒரு ஆடையை உருவாக்க, விதை (Spore) ஆகியது. சில நிமிட நேரத்தில் ஹரியைச் சுற்றி உப்புப் பளிங்கு உருவாகியது

மட்டுமல்லாமல் முழு ஏரியும் பளிங்குப் பாறையாகியது.

இந்தச் சம்பவம் நடந்து இருநூற்றைம்பது மில்லியன் வருடங்கள் ஆகிவிட்டன. புதிய மிருகங்கள் உருவாகின. வூலிமமத் போன்ற மிருகங்கள் அழிந்துவிட்டன. நதிகள் பல தோன்றின. சில நதிகள் வற்றிப்போயின. டைனோசர் உருவாகிப் பின் அழிந்துவிட்டது. மனிதன் என்னும் புதிய இருகால் விலங்கு உருவாகி நூறாயிரம் ஆண்டுகள் ஆகிவிட்டன. சமயங்கள் உருவாகின. ஆண்டவனுக்குப் பல பெயர்கள் சூட்டி மகிழ்ந்தார்கள்.

யேசு கிறிஸ்துநாதர் பிறந்து இரண்டாயிரம் வருடத்தில் சில ஆராய்ச்சியாளர்கள் அகழ்வராச்சியில் பாறைகளை உடைக்கும் போது பாறைகளுக்கு இடையில் உப்புப் பளிங்கைக் கண்டார்கள். உப்பை உருக்கி ஆராய்ச்சி செய்த போது நமது கதாநாயகனாகிய ஹரியைக் கண்டார்கள். ஆனந்தக் கூத்தாடினார்கள். துள்ளிக் குதித்தார்கள். ஹரியின் வயதைக் கணித்தபோது 250 மில்லியன் என அவர்களது கணினி காட்டியது.

ஹரியின் கனவு நிறைவேறியது. இருபது நிமிடம் வாழத் துடித்த கதாநாயகன் இருநூற்றைம்பது மில்லியன் வருடம் வாழ்ந்து விட்டுத் தனது வாரிசாக இரு நீர்வாழும் பக்ரீரியாக்களைத் தந்துவிட்டு மறைந்தான்.

இருபத்தைந்து வருடத்துக்கு மேல் தென்னாபிரிக்கச் சிறையில் வாழ்ந்த நெல்சன் மண்டேலாவையும், இருபத்திரண்டு வருடம் இந்தோனிசிய சர்வாதிகாரி சுகட்டோவினால் சிறை வைக்கப்பட்ட சுபந்தியோவைப் போல் மனிதரால் போற்றப் படாவிட்டாலும், விஞ்ஞானச் சரித்திரத்தில் தன் பெயரைப் பொறித்துவிட்டுத் தன் தாய் சென்ற இடத்துக்கு எமது ஹரியும் சென்றான்.

❑



# 24

## மஞ்சள் விளக்கின் அர்த்தம்!

நேரம் இரவு ஒன்பது மணியையும் கடந்து விட்டிருந்தது. தனது பெயர் மரியோ என அறிமுகப் படுத்திக் கொண்டு சுமார் இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க யுவதியொருத்தி எமது மிருக மருத்துவமனைக்கு வந்தாள்.

முகத்தில் அளவுக்கு அதிகமான மேக்கப். நித்திராதேவியுடன் இவள் சங்கமிப்பது குறைவோ எனச் சொல்லும் விதமாகக் கண்களின் கீழ்ப்புறம் கருவளையம்.

தனது நாயை கொண்டு வந்திருந் தாள். அதன் இனம் Boxer. பிரச்சினை யை வினவினேன்.

"நேற்று குட்டிபோட வேண்டிய நாய், இன்னும் பிரசவத்திற்கு தயாராக வில்லை" என்று கவலையோடு சொன்னாள்.

அறுபத்தி மூன்று நாட்கள், முன் பின்னாக இருக்கலாம். தொடர்ந்தும் நாயை Breed பண்ணவிருப்பதனால் சிசேரியன் செய்ய விரும்பவில்லை என்றாள்.

நாய்க்கு ஊசி மருந்து ஏற்றிவிட்டு இருட்டறைக்கு அனுப்பினேன். நாய்க்கு பிரசவத்துக்கு இருட்டறைதான் தகுந்த சூழல். அச்சமயம் எனக்கு ஊர் ஞாபகம் வந்தது. அங்கு டாக்டராக பணிபுரிந்த எனது நண்பன் சொல்வான் பிரசவத்திற்கு வருபவர்களிடம் கரு உண்டாகிய திகதி கேட்டால், நல்லூர் தேருக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, அல்லது சித்திரை மாதம் அட்டமியில், இல்லையென்றால் சன்னதி கொடியேறமுன்பு... இப்படிக் கோயில் திருவிழாக் களும், பஞ்சாங்கக் குறிப்புகளுந்தான் சரியான திகதியை அவர்களுக்கு சொல்லும்.

இனி நாம் தமிழ்க் கலண்டரில் சன்னதி கொடியேற்றம், நல்லூர் தேர் முதலானவற்றின் திகதிகளைத் தேடவேண்டும், என அலுத்துக் கொள்வான் அந்த டாக்டர் நண்பன்.

ஆனால் இங்கு இன்று தனது நாயை பிரசவத்திற்கு கொண்டுவந்த யுவதிக்கு நாய் கருத்தரிந்த நாள் சரியாகத் தெரிந்திருக்கிறது. நான் நாய்க்கு செலுத்திய ஊசியும் வேலை செய்யாத காரணத்தினால், சிசேரியன் செய்து பதின்மூன்று குட்டிகளை எடுத்தேன்.

மரியாவுக்கு அளவுகடந்த சந்தோஷம். நாயும், குட்டிகளும் அவளுடன் வீடு திரும்பின. இரண்டு வாரங்களின் பின்பு தையல் வெட்டுவதற்காக நாயை கொண்டு வந்தாள்.

அப்பொழுதும் இரவு நேரம். "ஏன் இந்த நேரத்தில் வருகிறாய்? பகலில் வந்தால் நாம் கட்டணம் வசூலிப்பதில்லை. இப்போது அவசர சிகிச்சை வேளை" எனச் சொன்னேன்.

"மன்னிக்கவும் எனக்கு வேலைநேரத்தில் வரமுடியாது. அதனால் கிடைத்த ஓய்வுநேரத்தில் வந்தேன்" என்றாள்.

"எங்கே வேலை?" - எனக் கேட்டேன்.

"North Melbourne, இல்" என்றாள்.

"என்ன வேலை?" சற்றுத் தாமதித்துப் பதில் வந்தது. விபச்சார விடுதியில் வேலை. நான் குனிந்தபடி நாய்க்குத் தையல் வெட்டிக் கொண்டிருந்தமையால் அவளது முகம் பார்க்க அவகாசம் இல்லை.

அவள் நாயுடன் சென்ற பின்பு "எங்கள் மருத்துவ மனைக்கு அருகில்தான் அந்த Brothel இருக்கிறது. நாம் உணவிற்குப் போவோமே.... ஒரு Hotel. இந்தப் பெண் வேலைசெய்யும் Brothel ஐ கடந்துதான் தினமும் செல்கிறோம்... ஒரு மஞ்சள் நிறத்தில் மின்குமிழ் ஒளி சிந்தும் அந்தக் கட்டிடம்தான்...." என்றாள் எமது மருத்துவமனையில் என்னுடன் பணிபுரியும் நர்ஸ்.

இந்தியாவில் 'சிவப்பு விளக்கு' பகுதி என்பார்கள்! அவுஸ்திரேலியாவில் Hospital, நர்ஸிங்ஹோமில் போன்ற வற்றுக்கே சிவப்பு விளக்கு. ஆனால், Brothel இல் மஞ்சள் விளக்கு!

நாட்டுக்கு நாடு விளக்குகள் மாறும் விநோதம் ரஸனையானதுதான்.

❑



# 25 விதையின் விலை பத்தாயிரம் டொலர்



தனது ஆண் நாய்க்குட்டிக்கு தடுப்பூசி மருந்து கொடுப்பதற்காக அதனைக் கொண்டு வந்தாள் ஒரு மத்திம வயதுப் பெண்.

அதனைச் சோதித்துப் பார்த்த பொழுது Umblical Hernia எனப்படும் தொப்புள் கட்டி வளர்ந்திருப்பது தெரிந்தது. "இதனை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும்" என்றேன்.

அந்தப் பெண் தயங்கினாள்.

அவளுக்கு நம்பிக்கை ஊட்டும் விதமாக, "இது சிறிய சத்திர சிகிச்சை தான். அதிகம் செலவும் இல்லை. ஆண்

நாய். எனவே, Castration செய்யும் போது இச்சிகிச்சையும் சுலபம்" என்றேன்.

இதற்கு அப்பெண் சம்மதித்ததை யடுத்து வரவேற்பு அறையில் கடமையிலிருப்பவரிடம் ஒரு திகதியைப் பதிவு செய்து கொள்ளுமாறும் சொன்னேன்.

சுமார் மூன்று மாதம் கழிந்து எமது மருத்துவமனைக்கு வக்கீல் நோட்டீஸ் வந்தது. நாம் பத்தாயிரம் டொலர் நட்ட ஈடு குறிப்பிட்ட நாயின் சொந்தக்காரருக்கு வழங்க வேண்டும் என்பதே அந்த நோட்டீஸின் சாராம்சம்.

நடந்த சம்பவம் இதுதான்.

நாயைக் கொண்டு வந்து சத்திரசிகிச்சைக்குத் திகதி பெற்றுச் சென்ற பெண்ணின் கணவர் Castrationக்கு விரும்பாத காரணத்தால், குறிப்பிட்ட பெண் மருத்துவமனைக்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, Umblical Hernia சத்திரசிகிச்சை மாத்திரமே செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறாள்.

எனினும் அச்சமயம் பணியில் இருந்த தாதி இதனை முறையாகப் பதிவு செய்யவில்லை.

அந்தப் பெண்ணின் கணவர்தான் சிகிச்சைக்கு வந்தார். வந்தவரும் நினைவுபடுத்தவில்லை.

ஆனால் நாய்க்குச் சத்திரசிகிச்சை செய்த டாக்டரோ முன்பு நான் தெரிவித்த ஆரோசனைப் பிரகாரம், Castration உம், Umblical Hernia உம் செய்துவிட்டார்.

இதனால் நாயின் விதை அகற்றப்பட்டது. நாயின் விதை அகற்றப்பட்டதால் அதன் இனவிருத்தி பாதிப்புக் குள்ளானதை சுட்டிக்காட்டியே எம்மீது வழக்குத் தொடர எத்தனித்தனர்.

தகவல் பரிமாற்றத்தில் நேர்ந்துவிட்ட தவறினால் ஏற்பட்ட கோளாறை அவர்களுக்கு விளக்கியும் அந்தத் தம்பதியர் சமரசத்திற்கு வர மறுத்தனர்.

நீதிமன்றம், வழக்கு என சந்திக்க நேர்ந்தால் ஏற்படவிருக்கும் செலவைச் சுட்டிக் காட்டினேன்.

அத்துடன், நீங்கள், உங்களுக்கிருக்கும் பணத்தேவைக்காக நாயின் விதைக்கு விலை கூறுகிறீர்கள் என்றே நாமும் வாதிட நேரும் என்றேன்.

இதனைக் கேட்டுத் தயங்கிய தம்பதியர், நட்ட ஈடாக ஆயிரம் ரூபாய் பெறச் சம்மதித்தனர்.

எம் தாயகத்தில், 'நாய் விற்ற காசு குரைக்காது' என்பர். நாயின் விதைக்கே விலைகூறிப் பணம் பெற்றவர்களையும் இந்த அந்நிய மண்ணில் கண்டேன்.

❑







மனித நேயத்தை தேடும்
இலக்கியப் பணியில்
மனித - மிருக
உறவுகளிலே
முகிழ்ந்திடும்
வாழும் சுவடுகள்